விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 19 வியாழக்கிழமை (02.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 134

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## தற்கொலை குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டவர்களின் முழுமையான விபரம் பொலிஸாரால் வெளியீடு


சங்ரில் லா ஹோட்டல்


சங்ரில் லா ஹோட்டல்


சினமன் கிரேன்ட் ஹோட்டல்


கிங்ஸ் பெரி ஹோட்டல்


புனித செபஸ்டியன் தேவாலயம்


புனித அந்தோனியார் ஆலயம்


சீயோன் தேவாலயம்


ரொபிக்கல் இன் தெஹிவளை


தெமட்டகொட

23ஆம் பக்கம் பார்க்க....

# எத்தகைய நெருக்கடி வந்தாலும் ஆட்சியை கைப்பற்றியே தீருவேன்

### மே தின கூட்டத்தில் மகிந்த சூளுரை



(கொழும்பு) நாட்டில் எவ்வகையான நெருக்கடிகள் காணப்பட்டாலும் அனைத்தையும் வெற்றி கொண்டு அரசாங்கத்தை நிச்சயம் கைப்பற்றுவோம் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, அடுத்த வருடம் மே தினம் உழைப்பாளர்களுக்கு பல சலுகைகளை பெற்றுக் கொள்ளும் ஒன்றாக காணப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். 23

## தௌஹீத் ஜமாத் அமைப்புடன் ஐ.தே.கவுக்கும் தொடர்பு!

### பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை நோக்காக கொண்டு கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய தேசிய கட்சி தேசிய தௌஹீத் ஜமாத்துடன் நெருங்கிய தொடர்பை பேணி வந்துள்ளதாகவும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு அரசாங்கமே 23

### குளியாப்பிட்டி பள்ளிவாசல் மீது

## இனந்தெரியாத நபர்கள் கற்களை வீசி தாக்குதல்

(கொழும்பு)

குளியாப்பிட்டியில் பள்ளிவாசல் மீது இனந்தெரியாத நபர்கள் நேற்று கற்களை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஏதண்டவெல முஸ்லிம் பள்ளிவாசலில் மஹ்ரிப் 24

## 29 வருட உள்நாட்டு போரில் ஒரு வெளிநாட்டவர் கூட புலிகளால் கொல்லப்படவில்லை

### வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவன்

(யாழ்ப்பாணம்)

29 வருடங்கள் இலங்கையில் போர் நடந்தது. இந்தப்போரில் ஒரு வெளிநாட்டவர் கூட தமிழீழ விடுதலை புலிகளால் கொல்லப்படவில்லை. கட்டுநாயக்க தாக்கு 23

### தாக்குதல் தொடர்பான

## இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு


(கொழும்பு)

ஈஸ்டர் தினத்தில் நடத்தப்பட்ட தீவிரவாத தற்கொலை குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடைக்கால அறிக்கையொன்றை வழங்கியுள்ளது.

அது, தொடர்பிலான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் 24

## பிரபாகரன் இன்று இருந்திருந்தால் தமிழரின் நிலம் பறிபோயிருக்குமா?

### மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர் கேள்வி



(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால் இன்று தமிழ் மக்களுக்கு அவர்களின் சொந்த நிலம் இல்லாமல் போயிருக்குமா? கிழக்கு இழக்கப்பட்டிருக்குமா? எதிர்காலத்தில் நாட்டில் சுபீட்சம் ஏற்படுத்த மீண்டும் பிரபாகரன்தான் வர வேண்டுமா? என மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் குறிப்பிடு 23

### இந்திய மஹாராஷ்ராவில்

## படையினர் மீது குண்டுத் தாக்குதல்

✷ 16 வீரர்கள் பலி

(மஹாராஷ்ரா)

இந்திய மஹாராஷ்ரா மாநிலத்தில் பாதுகாப்பு படையினர் சென்ற வாகனத்தின் மீது நக்சலைட்கள் நடத்திய தாக்குதலில் 16பேர் பலியாகி உள்ளனர்.

மஹாராஷ்ரா மாநிலத்தின் கட்சிரோலி மாவட்டத்தில் 24

## தௌஹீத் ஜமாத் அமைப்பின் செயற்பாட்டாளர் உள்ளிட்ட 14 பேர் குருநாகலில் கைது

(கொழும்பு)

குருநாகல், வெல்லவ பகுதியில் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் செயற்பாட்டாளர் உள்ளிட்ட 14 பேர் பொலிஸாரால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போது குறித்த கைதுகள் இடம்பெற்றிருப்பதாக தெரியவருகின்றது.

மேலும், இதன்போது 6 வாள்கள் மற்றும் கோடரி உள்ளிட்ட ஆயுதங்கள் தொகையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3)

### உயிரைப் பணயம் வைத்தேனும்

## பயங்கரவாதத்தில் இருந்து தாய் நாட்டை விடுவிப்பேன்



### மே தின நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

உயிரை பணயம் வைத்தேனும் பயங்கரவாதத்திலிருந்து தாய் நாட்டை விடுவிப்பேன் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மே தின நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்களினால் இலங்கை வாழ் மக்களின் மனங்க 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முன்னாள் போராளிகளை இராணுவம் உள்ளீர்ப்பது மிகப்பெரும் ஆபத்து

## மாவை சேனாதிராசா எச்சரிக்கை

முன்னாள் போராளிகளை இராணுவத் தரப்பு உள்ளீர்ப்பது மிகப்பெரிய ஆபத்து என தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கும் இராணுவத்தரப்பினருக்கும் இடையே நேற்று யாழில் இடம்பெற்ற சந்திப்பை மேற்கோள் காட்டியே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மாவை சேனாதிராசா இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அத்துடன் இராணுவம் வேண்டாம் என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கும் போது தற்போதைய நிலையில் இராணுவத்தின் பாதுகாப்பு தேவையும் காணப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, ஐ.நா. தீர்மானத்தின் ஊடாக சர்வதேசம் எமது பக்கத்தில் உள்ள நிலையில் தற்போதைய நிலைமை அதனை மழுங்கடித்துவிடாது எனவும் ஐ.நாவின் ஆதரவை இழந்துவிடக்கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

### வனாத்துவில்லுவ பகுதியில்

## அடிப்படைவாத குழுக்கள் பயிற்சி ஆதாரங்களுடன் ஐவர் கைது

வனாத்துவில்லுவ பகுதியில் இஸ்லாமிய அடிப்படைவாத குழுக்கள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளதுடன், அதனுடன் தொடர்புடைய ஆதாரங்களுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கெபித்திகொல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்து தற்கொலை குண்டுதாக்குதல்களுடன் தொடர்புடைய ஆதாரங்கள் பல கைப்பற்றப்பட்டுள்ளதாக கெபித்திகொல்லாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ம-3)

### குண்டுத் தாக்குதலில்

## சீன விஞ்ஞானிகள் நால்வர் உயிரிழப்பு

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில், சீன விஞ்ஞானிகள் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர் என்று கொழும்பில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

சீன விஞ்ஞான அகடமியைச் சேர்ந்த இந்த விஞ்ஞானிகள் ஆய்வு நோக்கங்களுக்காக கடந்த ஏப்ரல் நடுப்பகுதியில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போதே, அவர்கள் குண்டுவெடிப்பில் உயிரிழந்துள்ளனர். இவர்களின் சடலங்கள் 'குடும்பத்தினரால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தக் குண்டுவெடிப்பில் சீன விஞ்ஞான அகடமியைச் சேர்ந்த மேலும் 5 பேர் காயமடைந்தனர். அவர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக சீனாவுக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்று சீனாவின் ஷின்ஹுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

### யாழ்., மடத்தடிப் பகுதியிலுள்ள

# கடை ஒன்றிலிருந்து ரூ.1 லட்சம் பெறுமதியான ஒயில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மடத்தடி ஏ9 வீதியில் அமைந்துள்ள ஒயில் விநியோக கடையில் ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான ஒயில் களவாடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வேளை விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் குருநகர் பகுதியில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவேளை குறித்த திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரவு வேளை கடையின் உரிமையாளர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவரது மனைவி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். இதனை அவதானித்த சிலர் மனைவி கடையைப் பூட்டிச் சென்றவேளை பின்புறமாகச் சென்று பூட்டிய கதவினை உடைத்து கொள்கலனில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான உராய்வு நீக்கியை (ஒயில்) களவாடிச் சென்றுள்ளனர்.

வீட்டுடன் இணைந்தவாறு காணப்படும் குறித்த கடையில் இவ்வாறு களவுச் சம்பவம் இடம்பெற்றமை இரண்டாவது தடவை என குறிப்பிட்ட கடை உரிமையாளர் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சிசிரிவி காணொளி பதிவாகியுள்ளதுடன் களவுச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-9)




கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி கோ.ஜெயவதனி அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர் வல்லிபுரம் வேலாயுதம்

தோற்றம்:07.10.1932 மறைவு: 29.04.2019

அவர்கள் 29.04.2019 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

பிரிவுத்துயருடன்...
பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-6251)


# குளியாப்பிட்டி பள்ளியிலிருந்து சந்தேகத்துக்கிடமான உடைகள் மீட்பு

## பெண் ஒருவரும் கைது

குளியாப்பிட்டி, யாவத்த பகுதியில் இராணுவ சீருடை போன்ற சில உடைகளும் பிக்குகள் அணியும் உடைகள் சிலவும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள வணக்கஸ்தலமொன்றில் இருந்து இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து நாடளாவிய ரீதியில் பாரிய சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது குறித்த உடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், குறித்த வணக்கஸ்தலத்தில் இருந்த பெண் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# பாராளுமன்ற உறுப்பினரின் சாரதி ஆயுதங்களுடன் அதிரடிக் கைது

துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூரின் வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்மாந்துறை மலையடிக்கிராமத்தில் உள்ள அவரது தாயாரின் வீட்டுக்கு அருகில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்ட நிலையில், சந்தேகத்தில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் கூறியுள்ளனர்.

நாடு முழுவதும் இராணுவம், பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் இணைந்து பல்வேறு சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3)

### அம்பாறை சம்மாந்துறைப் பகுதியில்

# அமெரிக்க துப்பாக்கிகள் உட்பட பெருமளவிலான ஆயுதங்கள் மீட்பு

அம்பாறை - சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்கம்பிட்டி பகுதியில் பயங்கரவாதிகளால் மறைத்து வைக்கப்பட்டதாக கூறப்படும் பெரும் தொகையான ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்ட பாழடைந்த வீட்டின் உரிமையாளர் ஒருவர் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின்போது பாழடைந்த வீடு ஒன்றில் புதைக்கப்பட்ட நிலையிலேயே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது MP 25 ரக அமெரிக்க தயாரிப்பு மைக்ரோ கைத்துப்பாக்கி, 9 MM கைத்துப்பாக்கி, பென் துப்பாக்கிகள் 2, சோட்கண் துப்பாக்கி தோட்டாக்கள் 8, T56 ரக துப்பாக்கி ரவை கூடு 1 மற்றும் 170 தோட்டாக்கள், ஜெலக்னைட் குச்சிகள் 200, வயர் தொகுதி 23, அமோனியம் நைட்ரேட் உர பை 25 கிலோ 4, இராணுவ மேலங்கி 1, வாள் 1, கைத்துப்பாக்கி தோட்டாக்கள் என்பன மீட்கப்பட்டு தடயவியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. (ம-3)

# முல்லை அளம்பில் பகுதியில் இராணுவ உபகரணங்கள் மீட்பு



முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் உள்ள தனியார் விடுதியொன்றில் இருந்து பெருமளவு இராணுவ உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவ சப்பாத்து, சீருடை, வோக்கி டோக்கி, சிம், கத்தி, தொலைநோக்கி உள்ளிட்ட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட பொருட்கள் முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

விடுதியின் உரிமையாளரை கண்டறிய பொலிஸார் விசாரணைகளை நடத்துகிறார்கள். (ம-3)

# காரும் ஆட்டோவும் மீசாலையில் விபத்து

## இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

மீசாலைப் பகுதியில் காரும் ஆட்டோவும் மோதிக் கொண்டதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஆட்டோவில் சென்ற மீசாலை வடக்கைச் சேர்ந்த இரத்தினம் சுரேஸ் (வயது-43), மீசாலை புத்தூர் சந்தியைச் சேர்ந்த பொன்னுத்துரை சபேசன் (வயது-42) ஆகியோர் காயமடைந்தவர்களாவர்

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-30,114)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டுத் தாக்குதல் பின்னணியில் வெளிநாட்டு சூத்திரதாரி

# எனது நாட்டை விட்டு விடுங்கள்

## ஐ.எஸ்.தீவிரவாதிகளிடம் மைத்திரி வேண்டுகோள்

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற குண்டுதாக்குதல்களின் பின்னணியில் வெளிநாடொன்றை சேர்ந்த சூத்திரதாரியிருக்கலாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தேகம் வெளியிட்டுள்ளார். எனது நாட்டை விட்டு விடுங்கள் என்ற செய்தியை ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பிற்கு தெரிவிக்க விரும்புவதாகவும் ஜனாதிபதி கூறினார்.**



ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பிற்கு என்னிடம் ஒரு செய்தியுள்ளது. எனது நாட்டை விட்டு விடுங்கள் என்பதே எனது அந்த செய்தி என அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ். அமைப்பு சிறிய நாடுகளை இலக்குவைக்கும் தந்திரோபாயத்தை பின்பற்ற ஆரம்பித்திருக்கலாம் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த தசாப்தத்தில் இலங்கையிலிருந்து சென்று ஐ.எஸ். அமைப்பினரிடம் பயிற்சி பெற்ற சிறிய குழுவினர் குறித்து அதிகாரிகளுக்கு தெரிந்திருந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விசாரணைகளின் மூலம் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட குண்டுகளே பயன்படுத்தப்பட்டுள்ளமையும் தெரிய வந்துள்ளது என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## விகாராதிபதி கொலை!

(நாகொட)

நாகொட பகுதியில் அமைந்துள்ள மாபலகம பிரிவெனாவிற்கு பொறுப்பான விகாராதிபதி தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கும் நேற்று அதிகாலை 5 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலேயே இடம்பெற்றுள்ளதாக சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பணக்கொடுக்கல் வாங்கல் காரணமாக இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியமையாலேயே இந்த தேரர் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவரை தேடும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

## பதுளை சிறைச்சாலைக்கு அருகிலிருந்த பதுங்கு குழி கண்டுபிடிப்பு; ஐவர் கைது



(பதுளை)

பதுளை நகரின் மத்தியிலுள்ள சிறைச்சாலைக்கு (12 அடி) அருகிலுள்ள வீடொன்றில் 3 அறைகளுடனான பதுங்கு குழியொன்று பதுளை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்தப் பதுங்கு குழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், இதன்போது 5 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வீட்டை சுற்றிவளைத்த போது, அங்கு பதுங்கு குழியொன்று காணப்பட்டதுடன், இதில் 2 அறைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு, மற்றொரு அறை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டும் வந்ததாகவும் பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## கேகாலையில் இடம்பெற்ற சுற்றிவளைப்பில் ஆயுதங்கள்,தொடர்பாடல் சாதனங்கள் மீட்பு

### இதுவரை 150 பேர் கைது



(கேகாலை)

கேகாலை - கொட்டியாகும்புர பகுதியில் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது ஆயுதங்களும் தொடர்பாடல் சாதனங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இருப்பினும் இந்த சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்பட வில்லை என்பதுடன் இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர்.

நாடு முழுவதும் இராணுவத்தினர், பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் இணைந்து பல்வேறு சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில், இதுவரை முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்புகளில் 150இற்கும் மேற்பட்ட சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 44 சந்தேக நபர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் பெண் உட்பட 16 பேர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தீவிரவாதத்தை பிரசாரம் செய்யும்

## 800 மத போதனையாளர்களை உடனடியாக வெளியேற்றுங்கள்

### அமைச்சர் சம்பிக்க வலியுறுத்து

(கொழும்பு)

மத போதனைகளை நடத்துவற்காக 800 வெளிநாட்டவர்கள் இலங்கையில் தங்கியிருப்பதாக பெருந்தெருக்கள், மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



எனவே அவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு பொறுப்பானவர்களிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் தமது மத போதனைகளுடன் தீவிரவாதத்தை பிரசாரம் செய்வதாகவும் அமைச்சர் குற்றம்சாட்டியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தோனி வந்தார்... வெற்றி தந்தார்

## சென்னை 'சுழலில்' டில்லி 'காலி'


பந்தை விளாசும் சென்னையின் அணித் தலைவர் தோனி

டில்லி அணிக்கு எதிரான பிரிமியர் தொடர் லீக் போட்டியில் காய்ச்சலில் இருந்து மீண்டு வந்த அணித் தலைவர் தோனியின் அசத்தல் ஆட்டம் கைகொடுக்க, சென்னை அணி 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியாவில், 12வது ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடர் நடக்கிறது. சென்னையில் உள்ள சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் 'நடப்பு சம்பியன்' சென்னை அணி, டில்லி அணியை எதிர் கொண்டது.

டில்லி அணியில் ரபாடா, இஷாந்த் சர்மாவுக்கு பதிலாக டிரண்ட் பவுல்ட், ஜெகதீஷா சுசித் தேர்வாகினர். சென்னை அணியில் துருவ் ஷோரே, மிட்சல் சான்ட்னர், முரளி விஜய் நீக்கப்பட்டு அணித் தலைவர் தோனி, டு பிளசி, ரவிந்திர ஜடேஜா சேர்க்கப்பட்டனர்.

நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணித் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர், 'களத்தடுப்பை' தேர்வு செய்தார்.

**வோட்சன் ஏமாற்றம்**

சென்னை அணிக்கு ஷேன் வோட்சன், டு பிளசி ஜோடி ஆரம்பம் கொடுத்தது. முதல் ஓவரை கட்டுக்கோப்பாக வீசிய போல்ட், ஒரு ஓட்., மட்டுமே வழங்கினார். இதேபோல அடுத்த 2 ஓவர்களையும் கச்சிதமாக வீசிய சுசித், போல்ட் தலா ஒரு ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுக்க, சென்னை அணி 3 ஓவர்களில், 3 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து திணறியது. இந்த நெருக்கடியில் விளையாடிய வோட்சன் (0), சுசித் 'வேகத்தில்' வெளியேறினார்.

கிறிஸ் மோரிஸ் வீசிய 5வது ஓவரின 2வது பந்தில், இப்போட்டிக்கான முதல் பவுண்டரி அடித்தார் டு பிளசி. இந்த ஓவரின் கடைசி பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய ரெய்னா, அக்சர் படேல் பந்தில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி விளாசினார். சென்னை அணிக்கு முதல் 6 ஓவரில் 27 ஓட்., மட்டுமே கிடைத்தது.

**ரெய்னா அபாரம்**

மோரிஸ் வீசிய 9வது ஓவரில் ரெய்னா, டுபிளசி தலா ஒரு பவுண்டரி அடித்தனர். அமித் மிஸ்ரா வீசிய 12வது ஓவரின் கடைசி பந்தை பவுண்டரிக்கு அனுப்பினார் ரெய்னா. மறுமுனையில் எழுச்சி கண்ட டு பிளசி, ரூதர்போர்ட், அக்சர் படேல் பந்தில் தலா ஒரு சிக்சர் விளாசினார். இரண்டாவது விக்கெட்டுக்காக 83 ஓட்டங்கள் சேர்த்த போது அக்சர் படேல் 'சுழலில்' டுபிளசி (39) சிக்கினார். சுசித் வீசிய 15வது ஓவரின் முதலிரண்டு பந்தை விளாசிய ரெய்னா, ஐ.பி.எல்., அரங்கில் தனது 37வது அரைச் சதத்தை பதிவு செய்தார். மூன்றாவது பந்தை சிக்சருக்கு அனுப்பிய ரெய்னா (53), 5வது பந்தில் அவுட்டானார்.

**தோனி விளாசல்**

அடுத்து வந்த ரவிந்திர ஜடேஜா, அக்சர் படேல் வீசிய 16வது ஓவரின் கடைசி 2 பந்தில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி விளாசினார். மோரிஸ் வீசிய 17வது ஓவரில் தோனி, ஜடேஜா தலா ஒரு பவுண்டரி அடித்தனர். போல்ட் பந்தை சிக்சருக்கு அனுப்பிய ஜடேஜா (25), மோரிஸ் 'வேகத்தில் ஆட்டமிழந்தார். மோரிஸ் வீசிய 19வது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய தோனி, பவுல்ட் வீசிய கடைசி ஓவரில் ஒரு பவுண்டரி, 2 சிக்சர் அடித்தார்.

20 ஓவர்களில் சென்னை அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களை எடுத்தது. தோனி (32), அம்பதி ராயுடு (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர். டில்லி அணி சார்பில் சுசித் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**ஸ்ரேயாஸ் ஆறுதல்**

சவாலான இலக்கை விரட்டிய டில்லி அணிக்கு பிரித்வி ஷா (4) ஏமாற்றினார். ஹர்பஜன் வீசிய 4வது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த ஷிகர் தவான் (19) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர், தீபக் சகார் வீசிய 5வது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி விளாசினார். இம்ரான் தாகிர் 'சுழலில்' ரிஷாப் பண்ட் (5) சிக்கினார். ஜடேஜா பந்தில் கொலின் இங்ராம் (1) சரணடைந்தார்.

தாகிர் வீசிய 11வது ஓவரில் அக்சர் படேல் (9), ரூதர்போர்ட் (2) ஆட்டமிழந்தனர். ஜடேஜா வீசிய 12வது ஓவரில் கிறிஸ் மோரிஸ் (0), ஸ்ரேயாஸ் ஐயர் (44) 'பெவிலியன்' திரும்பினர். சுசித் (6) 'ரன்-அவுட்' ஆனார். தாகிர் பந்தில் அமித் மிஸ்ரா (8) ஆட்டமிழந்தார்.

டில்லி அணி 16.2 ஓவர்களில் 99 ஓட்டங்களுக்கு சுருண்டு தோல்வியடைந்தது. போல்ட் (1) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் சென்னை அணி சார்பில் இம்ரான் தாகிர் 3.2 ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக சென்னையின் தோனி தேர்வானார்.

**37ஆவது அரைசதம்**

அபாரமாக ஆடிய ரெய்னா, 37 பந்தில் 59 ஓட்டங்கள் விளாசினார். இது, இவரது 37வது அரைசதம். இதன்மூலம் ஐ.பி.எல்., அரங்கில் அதிக அரைசதமடித்த வீரர்கள் பட்டியலில் 2வது இடத்தை ஷிகர் தவானுடன் (37) பகிர்ந்து கொண்டார். முதலிடத்தில் வோர்னர் (44 அரைசதம்) உள்ளார். நான்காவது இடத்தை தலா 36 அரைசதத்துடன் ஹோலி, கம்பிர் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

# 'ஹட்ரிக்' மகிழ்ச்சியில் கோபால்

ஐ.பி.எல்., தொடரில் 'ஹட்ரிக்' சாதனை நிகழ்த்திய மகிழ்ச்சியில் உள்ளார் ராஜஸ்தான் அணியின் ஸ்ரேயாஸ் கோபால்.

ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடரின் லீக் சுற்று இறுதிகட்டத்தை எட்டியுள்ளது. பெங்களூருவின் சின்னச்சாமி மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் ராஜஸ்தான், பெங்களூர் அணிகள் மோதின.


'ஹட்ரிக்' எடுத்த மகிழ்ச்சியல் மிதக்கும் கோபால்

இதில் வென்றால் மட்டுமே 'பிளே ஆப்' வாய்ப்பில் நீடிக்க முடியும் என்ற நிலையில் பெங்களூரு களமிறங்கியது. மழை காரணமாக 3:30 மணி நேரம் தாமதமாக தொடங்கியது. தலா 5 ஓவர் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டது.

முதலில் விளையாடிய பெங்களூர் அணிக்கு ராஜஸ்தான் 'சுழல்' வீரர் ஸ்ரேயாஸ் கோபால் தொல்லை கொடுத்தார். இவரது ஒரே ஓவரில் அணித் தலைவர் ஹோலி, டி வில்லியர்ஸ், ஸரொய்னிசை ஆட்டமிழக்கச் செய்து, 'ஹட்ரிக்' சாதனை நிகழ்த்தினார்.

இதன்மூலம் பஞ்சாப் அணியின் சாம் குர்ரானுக்குப் பின், இந்த சீசனில் இந்த இலக்கை எட்டிய இரண்டாவது பந்துவீச்சாளரானார். மீண்டும் மழை குறுக்கிட போட்டி ரத்தானது. பெங்களூரின் அடுத்த சுற்றுக்கான வாய்ப்பும் பறிபோனது.

ஸ்ரேயாஸ் கோபால் கூறுகையில்," பெங்களூருக்கு எதிராக மழையால் பாதிக்கப்பட்ட போட்டியில் வெற்றி கிடைக்கவில்லை. ஆனால், அணித் தலைவர் ஹோலி, டி வில்லியர்சை ஒரே ஓவரில் ஆட்டமிழக்கச் செய்தது மகிழ்ச்சி. இவர்களுக்கு எதிராக செயற்பட்டபோது சற்று பதற்றமாக இருந்தது. இதையும் தாண்டி 'ஹட்ரிக்' சாதனை படைத்தது உற்சாகத்தை அளித்தது," என்றார்.




# 'வேகப்புயல்' ஜோயல்

உலகக்கிண்ண அரங்கில் 'வேகத்தால்' எதிரணிகளை திணறடித்தவர் மே. தீவுகளின் ஜோயல் கார்னர். 6 அடி 8 அங்குலம் உயரம் கொண்ட இவர், துல்லியமாக 'யோர்க்கர்' வீசுவதில் கில்லாடி. ஒரு நாள் போட்டிகளில் 1977ல் அறிமுகமானார்.

ஹோல்டிங் ஆண்டி ரெபர்ட்ஸ், மல்கம் மார்ஷல் உள்ளிட்ட மே.தீவுகள் 'வேகப்புயல்களுடன்' சேர்ந்து அசத்தினார்.

1979இல் இங்கிலாந்தில் நடந்த உலகக் கிண்ண தொட ரில் முதன்முறையாக பங்கேற்றார்.

இத்தொடரின் இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மே.தீவுகள் அணி 60 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்களை எடுத்தது.

**ஐந்து விக்கெட்**

பின் களமிறங்கிய இங்கிலாந்து அணி கார்னரின் 'வேகத்தில்' அதிர்ந்தது. இவர் ஒரு கட்டத்தில் 4 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்த, இங்கிலாந்து அணி 194 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

மே.தீவுகள் அணி கிண்ணத்தை தக்க வைத்துக் கொண்டது. அபாரமாக பந்துவீசிய கார்னர், உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் சிறந்த பந்துவீச்சை (11-0-38-5) பதிவு செய்தார்.

1983இல் நடந்த உலகக்கிண்ணத் தொடரிலும் விளையாடிய இவர், மொத்தம் 8 உலகக்கிண்ண போட்டிகளில் 13 விக்கெட்டுக்கள், 52 ஓட்டங்கள் எடுத்தார்.


1987இல் ஓய்வுபெற்ற இவர், மே.தீவுகள் அணியின் தற்காலிக முகாமையாளராக சிறிதுகாலம் பணியாற்றினார்.

**சோபர்ஸ் கௌரவம்**

மே.தீவுகளின் மிகச்சிறந்த சகலதுறை வீரர் சேர் கரி சோபர்ஸ். ஒரே ஒரு நாள் போட்டியில் (எதிர் இங்கிலாந்து, 1973) தான் விளையாடினார். இதில் டக்அவுட் ஆனதுதான் சோகம். 93 டெஸ்டில் 8,032 ஓட்., (சராசரி 57.78) மற்றும் 255 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன் அடிப்படையில், 2007ல் மே.தீவுகளில் நடந்த உலகக்கிண்ண தொடரை ஆரம்பித்து வைக்கும் கௌரவம் பெற்றார்.

## இந்தியன் பிறிமியர் லீக் - 2019
## புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| Q1 | சென்னை சுப்பர் கிங்ஸ் | 13 | 9 | 4 | 18 |
| Q2 | டில்லி கப்பிட்டல்ஸ் | 13 | 8 | 5 | 16 |
| 3 | மும்பை இந்தியன்ஸ் | 12 | 7 | 5 | 14 |
| 4 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 12 | 6 | 6 | 12 |
| 5 | ராஜஸ்தான் றோயல்ஸ் | 13 | 5 | 7 | 11 |
| 6 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 12 | 5 | 7 | 10 |
| 7 | கிங்ஸ் XI பஞ்சாப் | 12 | 5 | 7 | 10 |
| 8 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 13 | 4 | 8 | 9 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான நிலைய பாதுகாப்புக்காக நவீன உபகரணங்கள் கொள்வனவு

(கொழும்பு)

கடந்த 21ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவத்தைப் போன்று, மற்றுமொரு சம்பவம் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கில், கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதன் ஒரு அம்சமாக, விமான பயணிகளின் பொதிகள், பொருட்களை சோதனையிடுவதற்கு நவீன தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக போக்குவரத்து, சிவில் விமானசேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை யோசனைக்கு, அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. (இ-7)

# விமானப் படையினரின் சீருடைகள் நேற்று மீட்பு

(தெஹிவளை)

தெஹிவளை- களுபோவில, வைத்தியசாலை வீதியோரத்திலிருந்து விமானப் படையினரின் சீருடைகள் அடங்கிய பொதி யொன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டதாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான பொதியொன்று கிடப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்த சீருடைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர். (இ-7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11 . 01 . 1932 மறைவு 12 . 05 . 2018

**அமரர் செல்லையா செல்வரத்தினம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

நிலையில்லா வாழ்வுதான் புரிகிறது தாயே
இருப்பினும் உம் பிரிவு மனதை வாட்டுதே
அன்பு நிறைந்த வார்த்தைகளால் எமை ஆண்ட தாயே
ஓடோடி வாருமம்மா ஒருமுறை உன் முகம் காண

278, சில்வா வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.
(C-6242)
குடும்பத்தினர்.

# மும்மொழி கல்வியை வழங்கும் பாடசாலையை அமைக்க அனுமதி

(கொழும்பு)

மினுவாங்கொட பிரதேசத்தில் மும்மொழி கல்வியை கற்கக்கூடிய பாடசாலையை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. மினுவாங் கொடை தன்சலவத்தை என்ற காணியில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய பாடசாலையொன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

வேகமாக வளர்ச்சியடைந்து வரும் கம்பஹாவை அண்டிய பிரதேசத்தில் வாழும் பிள்ளைகளுக்காக தரமான கல்விக்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் அனைத்து வசதிகளையும் கொண்டதாக இந்த பாடசாலை அமைக்கப்படவுள்ளது.

உத்தேச பாடசாலை தரம் 1 இற்கு அமைவாக 6 வகுப்புக்களை கொண்டதாக மும்மொழி கல்வியை கற்கக் கூடிய பாடசாலையாக அமைப்பதற்காக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)


# சட்டவிரோதமாக தங்கியிருந்த 48 இந்தியப் பிரஜைகள் கைது

குடிவரவு-குடியகல்வு சட்டத்தை மீறிய 48 இந்தியப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அளுத்கம மற்றும் பெந்தர ஆகிய பிரதேசங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றுலா விசாவில் வருகை தந்துள்ள இவர்கள் இலங்கையில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டு வந்துள்ளதாக தெரியவருகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் 42 பேர் விசா காலம் முடிவடைந்தும் நாட்டில் தங்கியிருந்துள்ளதாக குடிவரவு- குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. ஏனைய ஆறு பேர் நாட்டிலிருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இவர்கள் மிரிஹான விசேட முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## நீங்கா! நினைவலைகள் ஒன்பதில்



செல்வன். **மகாலிங்கம் சதீஷன்**
பணிப்பாளர்
(பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப்)

கனத்த இதயத்துடன் கார் மேகம் ஆனாய் - நீ
என்று பெருமழையாய் அவனியில் உதிப்பாய்
எண்ணியதை கயவன் முடித்து விட்டான் - நீ இன்றி
வாழ்கின்றோம் நாம் உன்னை நினைத்து

என்றும் உன் நினைவுடன் உறவுகள்
பிள்ளையார் கோவில் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

மலர்வு 09.09.1984 உதிர்வு 02.05.2010 (C-4250)

## இராசி பலன்

**மீனம்:** தொழிலில் திசை திருப்பங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மேடம்:** காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள், ரோக பயமுண்டு.

**இடபம்:** வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், அந்நியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**கும்பம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு,பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்:** கௌரவமானவர்கள் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிபுகள் எடுப்பீர்கள், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**மகரம்:** முன்னேற்றப் பாதையை நோக்கி நகர்வீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**சிம்மம்:** பொறுமையால் பெருமைகள் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும், திருடர் பயமுண்டு, விரயங்கள் கூடும் நாள்.

**கிரகநிலை:** சுக், சந் | புத, சூரி | செவ் | ராகு | சனி, கேது, குரு

சந்திராஷ்டமம்
உத்திரம், அத்தம்

**02.05.2019**
சித்திரை 19, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 3.51 மணிவரை
உத்தரட்டாதி பிற்பகல் 1.27 மணிவரை
சுபநேரம் 7.27-8.57 மணிவரை
இராகுகாலம் 1.27-2.57 மணிவரை
பிரதோச விரதம்
வளவன்

**தனுசு:** வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** பிள்ளைகளின் எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, மனதில் தேவையற்ற குழப்பங்கள் தோன்றி மறையும்.

**துலாம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் குழப்பங்கள் தோன்றி மறையும்.

**கன்னி:** களஸ்திர நன்மையுண்டு, முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, நண்பர்களின சந்திப்பு இடம்பெற வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் நாளை 3 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணியள வில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளதால் பெற்றோர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள் ளுமாறு அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5)

*****

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புக் கருதி இக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள் தவறாது இதில் கலந்து கொள் ளுமாறு பாடசாலையின் அதிபர் அருட்பணி அ.பீ.திருமகன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5)

*****

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் இயங்கும் குட்டி சுட்டி முன்பள்ளி,அகம் குழந்தைகள் பகல் நேர காப்பக மாணவர்களின் பெற்றோர்களுக்கு விசேட கலந்துரையாடல் நாளை மறுதினம் 4 ஆம் திகதி முன்பள்ளி பிரதான மண்டபத்தில் காலை 9 மணியளவில் நடைபெறும். அனைத்து பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-7)

# சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

இரண்டு மாதங்களாக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் உள்ள சடலத்தை உறவினர்கள் பொறுப்பேற்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி 3 ஆம் வாய்க் காலைச் சேர்ந்த பெருமாள் பரமசிவம் (வயது-65) என்பவர் கடந்த பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி சுகவீனம் காரணமாக புங்குடுதீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக அன்றைய தினமே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பின்னர் 11 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

இதுவரை யாரும் குறித்த சடலத்தை பொறுப்பேற்கவில்லை. உறவினர்கள் அடையாளம் காணுமிடத்து சடலத்தை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்பேற்குமாறும் இல்லையெனில் அரச செலவில் அடக்கம் செய்யப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (இ-9)

# 14 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து
# 6 தொழிற்சங்கங்கள் மேதின பிரகடனம்



(யாழ்ப்பாணம் )

தமிழ்த்தேசியத்தையும் சமூக மாற்றத்தையும் ஒருங்கே வலியுறுத்தி முன் நகர்த்தும் மக்கள் சக்தியை உருவாக்குவோம். மக்கள் அபிலாசைகளை மதிக்காத தமிழ் அரசியல் வாதிகளை நீக்கம் செய்வோம் எனும் பிரகடனத்துடன், 14 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் மேதின பிரகடனம் வெளியிட்டுள்ளனர். யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் உட்பட இலங்கை ஆசிரியர் சங்கம், வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், சமூக விஞ்ஞான ஆய்வு மையம், புதிய அதிபர் சங்கம், வடமராட்சி கிழக்கு பிரஜைகள் குழு உள்ளிட்ட அமைப்புக்கள் இணைந்து உலகத் தொழிலாளர் தினத்தைக் கொண்டாடினார்கள். நாட்டில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல் காரணமாக உலக தொழிலாளர் தினம் இம்முறை துக்கதினம் போன்று மிக அமைதியாகக் கொண்டாடப்பட்டது. அதனடிப்படையில், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் உலக தொழிலாளர் தின கலந்துரையாடல், பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகியது.

இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன், உயிர்த்த ஞாயிறு தினத்தன்று குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு, மே தினக் கூட்டம் ஆரம்பமாகியது. 6 தொழிற்சங்கங்களும் இணைந்து 14 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உலக தொழிலாளர் தின பிரகடனம் வெளியிட்டுள்ளனர்.

அந்தப் பிரகடனத்தில், தேசம், இறைமை, சுயநிர்ணயம், சமஷ்டி அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண குரல் கொடுப்போம். இவை இல்லாத அரசியல் தீர்வை நிராகரிப்போம். அரசியல் கைதிகள் உடனடியாக எந்தவித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்படல் வேண்டும். படையினர் வசமுள்ள காணிகள் உடனடியாக மக்களிடம் கையளிக்கப்படல் வேண்டும். மக்கள் தாமாக நடத்தும் போராட்டங்களில் நாங்களும் இணைந்து கொள்வோம். இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் உடனடியாக மீள் குடியேற்றம் செய்யப்படல் வேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திற்கு உடனடியாகத் தீர்வு வழங்கு, இனப்படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என உலக முற்போக்கு ஜனநாயக சக்திகளுடன் இணைந்து குரல் கொடுப்போம். தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். இதைத் தடுக்க சர்வதேச பாதுகாப்பு பொறிமுறையை உருவாக்குவோம். அத்துடன், தமிழ் மீனவர்களின் வாழ்வுரிமையைப்பறிப்பது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். இதற்காக இணைந்து போராடுவோம்.

சாதிமத, பிரதேச பால் ஒடுக்குமுறைகளை இல்லாதொழிப்போம். மலையக மக்களின் வாழ்வாதார அடையாளப் போராட்டங்களுக்கு துணை நின்று குரல் கொடுப்போம். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை விடுவிக்கப் போராடுவோம். நிலம், புலம் தமிழகத்திற்கிடையே ஓர் ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்போம். தமிழ் மக்களைப் பாதுகாக்க சர்வதேச பாதுகாப்பை கோருவோம். உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்களுக்கு சர்வதேச விசாரணையைக் கோருகின்றோம் உள்ளிட்ட 14 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர். இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்ற தொடர்ந்தும் பல போராட்டங்களையும் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர். இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற பொதுமக்கள் அணிதிரள வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-101)




# வழமைபோல் பேருந்து சேவை

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி, கொழும்பு பகுதிகளுக்குச் செல்லும் இரவு,பகல் பேருந்து சேவைகள் வழமைபோன்று யாழ்.பேருந்து தரிப்பிடத்திலிருந்து இடம்பெறுமென இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை செயலாற்று உதவி முகாமையாளர் செ. பிரகலாதன் தெரிவித்தார். (இ-10)

## குண்டு வெடிப்பில்
# உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி



(கரணவாய்)

குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த மக்களுக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போதே கடந்த 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த மக்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.(இ-60)

# தேரும் தீர்த்தவாரிக் காட்சியும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்ரீ.கதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மஹோற்சவத்தில் நாளை 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தவாரிக் காட்சியும் இடம்பெறும்.

6 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் சங்காபிஷேகம் நடைபெறும். (இ-5)

## 'பார்த்ததும் பிடித்தது; அடகு பிடித்தேன்'
# வாள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான இரு சந்தேகநபர்களும் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியில் வாள் ஒன்றை குளத்துக்குள் வீச முற்பட்ட இளைஞன் மற்றும் அவருக்கு வாளை வழங்கியவரையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரைவிளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

"வாள் சந்தேகநபருடையது இல்லை. அதனை அவர் 700 ரூபாவுக்கு அடகு பிடித்தார். பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கிராமத்தைச் சுற்றி வளைத்ததால் வாளை குளத்துக்குள் வீசுவதற்கு நண்பரிடம் வழங்கினார். அவர் அதனை குளத்துக்குள் வீசிய போது பொலிஸார் கண்டு விட்டனர்" என்று வாளை வீசுமாறு வழங்கிய சந்தேக நபரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றுரைத்தார்.

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இராணுவத்தினர், சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து சுற்றி வளைப்புத் தேடுதலை முன்னெடுத்தனர். இதன்போது நாவாந்துறை நாவலர் வீதிக்கு அண்மையிலுள்ள குளம் ஒன்றுக்குள் வாள் ஒன்றை வீச முற்பட்ட இளைஞனை பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன், அவரிடம் முன்னெடுத்த விசாரணையில் அவருக்கு வாளை வீசுமாறு வழங்கிய மற்றொருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.எஸ்.பீற்றர் போல் முன்னிலையில் முற்படுத்தினர்.

இதன்போதே சந்தேகநபரின் சட்டத்தரணி மேற்கண்டவாறு மன்றுரைத்தார்.

ஏன் அந்த வாளை வாங்கி வைந்திருந்தீர்? என்று சந்தேக நபரிடம் நீதவான் கேள்வி எழுப்பினார்.

"எனக்கு அந்த வாளைப் பார்த்த போது பிடித்திருந்தது. அதனால் அதனை 700 ரூபாவுக்கு அடகு பிடித்தேன்" என்று சந்தேகநபர் தெரிவித்தார்.

வழக்கை விசாரித்த நீதவான், வாளை வைத்திருப்பது பாரதூரமானது எனக் குறிப்பிட்டு சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (இ-101)

# வங்கிகளில் சோதனை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக வங்கிகளிலும் சோதனைகள் இடம் பெற்று வருகின்றன.

வங்கிக்குச் செல்லும் வாடிக்கையாளர்கள் வங்கிக்குள் நுழைய முன்னர் அவர்களது உடைமைகள் யாவும் பரிசோதிக்கப்படுகின்றன.

அத்துடன் வங்கிப் பாதுகாப்பு ஊழியர்களின் உடைமைகளும் பரிசோதனை செய்யப்படுகின்றன.

இச் செயற்பாடானது வங்கிகளில் மட்டுமன்றி ஏனைய அலுவலகங்களிலும் இடம்பெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஹ்ரானின் குடும்பத்தில் 18 பேரைக் காணவில்லை

## சகோதரி தகவல்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியென சந்தேகிக்கப்படும் மொஹமட் சஹ்ரானின் குடும்பத்தைச் சேர்ந்த 18 பேர் காணாமல் போயுள்ளதாகவும், அவர்கள் உயிரிழந்திருக்கக்கூடும் என்றும் அவரது சகோதரி தகவல் வெளியிட்டுள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்த சஹ்ரானின் சகோதரி இதனை தெரிவித்துள்ளார்.

தாக்குதலை தொடர்ந்து தமது குடும்பத்தை சேர்ந்த ஐவர் காணாமல் போனதாகவும், அவர்களில் தனது தந்தையும், மூன்று சகோதரர்களும், சகோதரியின் கணவரும் உள்ளடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சஹ்ரான் உயிரிழந்ததை பொலிஸ் நிலையத்தில் காணப்பட்ட அவரது உடல் பாகங்களை கொண்ட ஒளிப்படங்களின் ஊடாக அடையாளம் கண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருது துப்பாக்கிச் சூட்டில் சஹ்ரானின் தந்தையும் இரு சகோதரர்களும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஷங்கிரி லா ஹோட்டல் குண்டுதாரியின் சகோதரருக்கு 10-ம் திகதி வரை மறியல்

(கொழும்பு)

ஷங்கிரி லா ஹோட்டலில் கடந்த 21 ஆம் திகதி தற்கொலைத் தாக்குதல் நடத்திய மொஹமட் இப்ராஹிம் இன்சாப் அஹமட்டின் மூத்த சகோதரரை 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் தனுஜா ஜயதுங்க நேற்று உத்தரவிட்டுள்ளார். கடந்த 27 ஆம் திகதி தெமட்டகொட பகுதியில் வைத்து 2 வாள்கள் மற்றும் துப்பாக்கியுடன் சந்தேக நபரை தெமட்டகொட பொலிஸார் கைது செய்து நேற்று நீதிம ன்றில் ஆஜர்படுத்திய போதே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (இ-7)


**பெண் வேலையாள் தேவை**

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள குமரன் ஸ்ரோர்ஸிற்கு கணனி வேலையில் அனுபவமுள்ள பெண் வேலையாள் தேவை. (863)

**தொடர்பு: 077 344 4476**

# நாம் பெற்ற வெற்றிகளைத் தோற்கடிப்பதே பயங்கரவாதத் தாக்குதல்களின் நோக்கம்

## பிரதமர் ரணில் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

முன்னர் காணப்பட்ட சமூக, அரசியல், பொருளாதாரச் சிக்கல்களை வெற்றிகொண்டு, அமைதியான சூழலொன்றில் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி அடியெடுத்து வைத்த எமது நாடு இந்த திடீர் பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாக எதிர்கொண்ட தாக்கம் மிகவும் பாரியது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மே தினத்தை முன்னிட்டு நேற்று அவர் வெளியிட்டுள்ள செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டுக்காக வியர்வை சிந்தி, உழைத்த அப்பாவி மக்கள், கொடிய பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக உயிரிழந்து, காயமடைந்துள்ள சோகமானதொரு சந்தர்ப்பத்திலேயே இவ்வருட மே தினம் எம்மை அடைந்துள்ளது.

நாட்டில் ஸ்திரமின்மையை ஏற்படுத்தி நாம் பெற்றுக்கொண்ட அனைத்து வெற்றிகளையும் தோற்கடிப்பதே இத்தாக்குதல்களின் நோக்கம் என்பது தெளிவானது எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொழிலாளர் உழைப்பின் உண்மையான அர்த்தம் சமத்துவம், சகோதரத்துவம், சுயாதீனம் ஆகிய உயர் இலக்குகளிலேயே பொதிந்துள்ளன. நாம் விவசாய நிலத்தில், தொழிற்சாலையில், நவீன தொழில்நுட்பம் மிகுந்த தொழில் நிலையங்கள் போன்ற எந்த இடத்தில் பணியாற்றினாலும் இனவாதம் அல்லது மதவாதத்தை ஒதுக்கி விட்டு மனிதநேயத்திற்கு மதிப்பளிக்க கடமைப்பட்டவர்களாக உள்ளோம். அப்போது தான் தனிநபர் என்ற வகையிலும், ஒட்டுமொத்த சமூகம் என்ற வகையிலும் நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு எம்மால் பங்களிப்புச் செய்ய முடியும்.

சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஊடாக வேலை செய்யும் மக்கள், பலவற்றை வெற்றி கொள்ள முடியும். இதுவரை நாம் பெற்றுக்கொண்ட முன் னேற்றத்தை தீவிரவாத சக்திகள் தடுப்பதற்கு இடமளிக்காது நாம் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியுள்ளது. நமது முன்பே காணப்படும் சமூக, பொருளாதார, அரசியல் சவால்களை வெற்றிகொள்ள நாம் ஒற்றுமையாகவும், மிகுந்த திடவுறுதியுடனும் எழுந்து நிற்க வேண்டும்.

இந்த எதிர்பாராத தாக்குதல்கள் காரணமாக புண்பட்ட உள்ளங்களை ஆற்றுப்படுத்திக் கொண்டு, எமது மக்களிடம் காணப்படும் பலங்களை இனங்கண்டு முன்னோக்கிச் செல்லும் பயணத்தில் வேலை செய்யும் மக்களின் உழைப்புக்கு உரிய பெறுமானம் வழங்கப்படும் நீதியான சமூகமொன்றைக் கட்டியெழுப்ப இம்முறை மே தினத்தில் அர்ப்பணித்துச் செயற்படுவோம் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

வலம்புரி
021 221 7603,
021 567 1532
விளம்பரத் தொடர்புகளுக்கு

பழைமை வாய்ந்த

**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**ரெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

**பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்-2019**

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் எதிர்வரும் 16.05.2019 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலய அன்னதான கலாசார மண்டபத்தில் இடம்பெறும் என்பதனை ஆலய அங்கத்தவர்கள், உபயகாரர்கள் மற்றும் அடியவர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துவதுடன் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: நிர்வாக சபையினர்,
அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்,
கிளிநொச்சி.

(கி-6248)

# களுத்துறையில் வெடிப்புச் சம்பவம்

## ஒருவர் கைது

(களுத்துறை)

களுத்துறையில் குப்பைகளை எரிக்க முயன்ற போது வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது. தெபுவத பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

குப்பைகளை போட்ட வீட்டின் உரிமையாளர் கற்சுரங்க தொழிலில் ஈடுபட்டுள்ளமையும், அவர் பயன்படுத்திய ஜெலடின் குச்சிகளே குப்பைகளை எரிக்கும் போது வெடித்தமைக்கு காரணம் எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவருகிறது.

இதனையடுத்து வீட்டின் உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-7)

**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா:39 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:O/L, சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9611 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்3செவ்7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BAபட்டதாரி<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் சொந்த தொழில்<br>தொ.இ: G/9608 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>கி.பா: 32 ½ சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்O/L,சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு O/L, உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/9612 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>கி.பா: 25 ½செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரிஆசிரியர், Doctor, Engineer, Bank.<br>தொ.இ: G/9618 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:அத்தம் 4செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:Accounting & Finance , Manager, London<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, ஆங்கில தகைமை<br>தொ.இ: B/9613 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்:பூசம் 2<br>கி.பா: 35<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்:பட்டதாரி பயிலுநர்<br>எதிர்பார்ப்பு: Engineer, Dentist, Veterinary Doctor, Accountant, உயர் தொழில் தகைமை<br>தொ.இ: G/9622 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:பூரம் 1<br>கி.பா:17 ½செவ் 12 இல்<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்:NCT Civil, தொழில்நுட்பஅலுவலகர்<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில் / வெளிநாடு<br>தொ.இ: B/9614 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்:அத்தம் 4<br>தகைமை/தொழில்:O/L, தையல்<br>எதிர்பார்ப்பு:சாதாரண வரன்.<br>தொ.இ: G/9635 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
தொலைபேசிக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துருக்கியைச் சேர்ந்த 50 பயங்கரவாதிகள் இலங்கையில்

# தேசிய பாதுகாப்பை பலப்படுத்தத் தவறியவர்கள்

# உடனடியாக ஆட்சியிலிருந்து வெளியேற வேண்டும்

## ரணில் தரப்பிடம் மகிந்த அணி வலியுறுத்து




(கொழும்பு)

**தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்த உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்காத அரசாங்கம் உடனடியாக ஆட்சியிலிருந்து வெளியேற வேண்டும் என்று மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன வலியுறுத்தியுள்ளார். மேலும், தேர்தல் அரசியலை நோக்காகக் கொண்டுதான் அரசாங்கம் தொடர்ச்சியாக செயற்பட்டு வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்து எமக்கொரு நிலைப்பாடு இருக்கிறது. அதாவது, அனைத்து இன மக்களும் நாட்டில் சுதந்திரமாக வாழ்வதே தேசிய பாதுகாப்பாக இருக்க வேண்டும்: அனைவரும் இலங்கையர் என்ற நிலைப்பாட்டில் ஒன்றிணைய வேண்டும்.

தற்போது துருக்கி நாட்டைச் சேர்ந்த 50 பயங்கரவாதிகள் இலங்கைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதுதொடர்பில் அனைத்துத் தரப்பினருக்கும் எச்சரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆனால், பாதுகாப்பு விடயங்களில் ஏற்பட்டுள்ள குறைபாடு தொடர்பாக ஜனாதிபதியிடம் கேட்டால் அரசாங்கத்தின் பொறுப்பு என்கிறார்.

பிரதமரும் அரசாங்கத்தின் பொறுப்பு என்கிறார். அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் அரசாங்கத்தின் பொறுப்பு என்றுதான் கூறி வருகிறார். அப்படியென்றால் யார் அரசாங்கத்தின் பிரதிநிதி என்று தெரியவில்லை.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைமைக்கு ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்களே ஒழிய, உரிய நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

மேலும் பிரதமர் புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கொண்டுவர மட்டும்தான் தீவிரம் காண்பித்து வருகிறார். இந்த அரசாங்கம் ஆட்சிபீடமேறியதையடுத்து நாட்டின் தேசிய பாதுகாப்பு மட்டுமன்றி, ஜனநாயகமும் இல்லாது போயுள்ளது.

அரசாங்கத்தினால் இதுவரை கொண்டுவரப்பட்ட அனைத்து சட்டங்களும் பலவீனமாகவே காணப்படுகின்றன. தற்போது நாட்டின் தேசிய பாதுகாப்பு பலவீனமடைந்துள்ளமையால் மக்களும் அச்சத்துடனே வாழ்ந்து வருகிறார்கள். அத்தோடு, புலனாய்வுத்துறை முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளது.

தேர்தல் அரசியலை மட்டும் நோக்காகக்கொண்டே இந்த அரசாங்கத்தரப்பினர் செயற்பட்டு வருகிறார்கள். உயரதிகாரிகளை மாற்றுவதால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்கிவிட முடியாது.

பாடசாலைகள், மதஸ்தலங்களில் பாதுகாப்பை உறுதி செய்ய அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது? சுற்றுலாத்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளும் வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறு நாட்டில் பல பிரச்சினைகள் நீடித்துக்கொண்டே செல்கிறது.

இராணுவம், பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத் துறையினர் சிறப்பாக செயற்படுகிறார்களே ஒழிய அரசாங்கம் ஸ்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

எனவே, இந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

---

# தயாசிறியின் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அப்பட்டமான பொய்

## முஸ்லிம் அமைச்சர் ஹலீம் காட்டம்

(கொழும்பு)

சிங்கள மக்களை என்னில் இருந்து தூரப்படுத்தவே தயாசிறி ஜெயசேகர பொய்க் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து வருவதாக தபால் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.ஹலீம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜெயசேகர கட்சித் தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போது, அமைச்சர் ஹலீம் நாடு முழுவதும் 400 தௌஹீத் பள்ளிவாசல்களை பதிவுசெய்துள்ளதாக தெரிவித்திருந்த குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் வகையில் தபால் அமைச்சில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ரணில் அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்த 2015 ஆம் ஆண்டு முதல் முஸ்லிம் சமய அமைச்சராக நான் செயற்படுகின்றேன். இந்தக் காலப்பகுதியில் 400 தௌஹீத் பள்ளிவாசல்களை



அமைக்க நான் அனுமதியளித்ததாகவும் அதில் 50 பள்ளிவாசல்கள் எனது கண்டி மாவட்டத்தில் அமைக்க அனுமதி வழங்கி இருப்பதாகவும் தயாசிறி ஜெயசேகர குற்றம் சாட்டியிருந்தார். அவரின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அப்பட்டமான பொய்யாகும்.

அத்துடன் இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் கண்டியில் எனது தொகுதியான ஹரிஸ்பத்துவ சிங்கள மக்களை வெறுப்படையச் செய்யும் திட்டத்திலே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

அத்துடன் நாட்டில் மொத்தம் இரண்டாயிரத்து 599 பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்கள் இருக்கின்றன. அதேபோன்று ஆயிரத்து 775 மத்ரசாக்களும் 317 அரபுக்கல்லூரிகளும் இருக்கின்றன. கண்டி மாவட்டத்தில் மாத் திரம் 282 பள்ளிவாசல்கள் இருக்கின்றன. அதில் 94 பள்ளிவாசல்களை எனது காலத்தில் பதிவு செய்திருக்கின்றேன்.

கண்டியில் இடம்பெற்ற வன்முறையில் அதிகமான பள்ளிவாசல்கள் பாதிக்கப்பட்டன. அப்போது நீதிமன்ற நடவடிக்கைகளினூடாக அவற்றுக்கு நட்ட ஈடு பெற நட வடிக்கை எடுத்தபோது, அதில் அதிகமான பள்ளிவாசல்கள் பதிவு செய்திருக்கவில்லை.

அதனால் எமக்கு பாதிப்பு ஏற்பட் டது. அதனால்தான் நான் நாட்டில் இருக்கும் பதிவு செய்யாத அனைத்து பள்ளிவாசல்களையும் பதிவு செய்துகொள்ளுமாறு அறிவிப்பு செய்தேன். அதன் பிரகாரமே கண்டியில் 94 பள்ளிவாசல்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

அவ்வாறு இல்லாமல் இவை அனைத்தும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாசல்கள் அல்ல. ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டவையாகும். பொதுவாக புதிதாக பள்ளி வாசல்களைப் பதிவு செய்வதாக இருந்தால் அது நிர்மாணிக்கப்பட்டு 6 மாதங்கள் வரை செல்லும். அந்தக் காலப்பகுதியில் குறித்த பள்ளிவாசல் பதிவு செய்வதற்கான தகுதிகள் தொடர்பில்வக்கு சபையால் ஆராயப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# ஹக்கீமாக மாறிய சிவலிங்கம் கைது

(பண்டாரகம)

முஸ்லிம் பெயருடன் பள்ளிவாசலில் கடமையாற்றிய [illegible] ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பண்டாரகம- அட்டுலுகம மாராவ பிரதேசத்தின் பைகுர் ரஹ்மான் பள்ளியில் வைத்தே பெருமாள் சிவலிங்கம் என்ற குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரும் இராணுவத்தினரும் நேற்று பண்டாரகம பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்தச் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

5 வருடங்களுக்கு முன்னர் பண்டாரகம பிரதேசத்துக்கு சென்ற குறித்த நபர் மொஹமட் ஹக்கீம் என்ற பெயருடன் பள்ளிவாசலில் கடமையாற்றி வந்துள்ளதுடன், நாளொன்றுக்கு 5 தடவைகள் மத போதனைகளையும் நடத்தியுள்ளாரென ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதுடன், இவர் இதுவரை கிராம உத்தியோகத்தரைக் கூட சந்தித்து எவ்வித பதிவையும் மேற்கொண்டதில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவரது வங்கிக் கொடுக்கல்-வாங்கல்கள் சிவலிங்கம் என்ற பெயரிலேயே முன்னெடுக்கப்பட்டுவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வெசாக் தினத்தை எளிமையாகக் கொண்டாடுங்கள்"

# நாட்டைச் சூழ்ந்திருக்கின்ற ஆபத்து இன்னும் முழுமையாக நீங்கவில்லை

## பொதுபல சேனா அறிவுறுத்து

(கொழும்பு)

வெசாக் தினத்தை எளிமையாகக் கொண்டாடுங்கள் என பொதுபல சேனா வேண்டுகோள் விடுத்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கிறிஸ்தவ தேவாலயங்கள், நட்சத்திர ஹோட்டல்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்கள் ஆரம்பகட்டத் தாக்குதல்கள் என்றே தோன்றுகிறது. எனவே இச்செயற்பாடுகளுடன் தொடர்புடைய அனைவரையும் கைது செய்வதற்கு பாதுகாப்புப் பிரிவினருக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அத்தோடு நாட்டைச் சூழ்ந்திருக்கின்ற ஆபத்து இன்னமும் முழுமையாக நீங்காத நிலையில், இம்முறை வெசாக் கொண்டாட்டங்களை எளிமையான முறையில் முன்னெடுக்குமாறு மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம். அதுவே அனைவருக்கும் நன்மையானதும், பாதுகாப்பானதுமாகும் என்று பொதுபல சேனா அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் விதாரந்தெனியே நந்த தேரர் தெரிவித்தார்.


பொதுபல சேனா அமைப்பால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெற்ற மிக மோசமான மிலேச்சத்தனமான தொடர்குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னரும் மக்கள் புத்திசாலித்தனமாகவும், பொறுமையுடனும் இணக்கமான முறையில் செயற்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தனியார் ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு அனுமதி

## அமைச்சரவை வழங்கியது



(கொழும்பு)

தனியார் துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கான அடிப்படைச் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.


அதற்கமைய குறைந்தபட்சம் அடிப்படை சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 12 ஆயிரத்து 500 ரூபாய் வரை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தனியார்துறையில் நாளாந்தக் கொடுப்பனவு 400 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரை அதிகரிப்பதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக, தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பான சட்டமூலத்தை அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஞானசாரரின் கருத்துக்கள் குறித்து இனியாவது அவதானம் செலுத்துங்கள்

## அரச தரப்புக்கு திலங்க அறிவுரை



(கொழும்பு)

அடிப்படைவாதிகள் தொடர்பில் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் போன்றோர் தெரிவித்த கருத்துக்கள் குறித்து நாம் இனிமேல் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு கலகொட அத்தே ஞானசார தேரர், சில அமைப்புக்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அவர் கூறியவை இன்று உண்மையாகியுள்ளது.

எனினும், அவர் அந்தக் கருத்துக்களை அன்று கூறிய விதம், அவரின் நடவடிக்கை, பயன்படுத்தப்படும் வார்த்தை என்பது குறித்து விமர்சிக்கப்பட்டதே ஒழிய, அவரது கருத்து தொடர்பாக எவரும் கவனத்திற்கொள்ளவில்லை.

நாம் அவர் கூறிய கருத்துக்களை ஆராய வேண்டும். கடந்த காலங்களில் அடிப்படைவாதம் கூறிய கருத்துக்கள் குறித்து நாம் கவனத்தில் எடுக்கவில்லை.

அத்தோடு, மேல்மாகாணத்தின் முன்னாள் ஆளுநரான அலவி மௌலானாவும் இஸ்லாம் பயங்கரவாதம் குறித்த சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

எனவே, இனிமேலாவது நாம் இது குறித்து அவதானம் செலுத்த வேண்டும். ஞானசார தேரர் போன்றவர்கள் தெரிவித்த கருத்துக்களையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

அத்தோடு, கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லாவால் ஸ்தாபிக்கப்படும் பல்கலைக்கழகம் தொடர்பிலும் தற்போது பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

ஆனால், இந்த பல்கலைக் கழகத்துக்கான அனுமதி கடந்த அரசாங்கத்தாலேயே வழங்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெருமவால் தான் இதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

இந்தப் பல்கலைக்கழகமானது, இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் மேற்பார்வையுடனே ஸ்தாபிக்கப்படுகின்றது.

ஆகவே, இந்த விடயம் குறித்து தேவையில்லாத வதந்திகளைப் பரப்ப வேண்டாம் என்றும் நாம் கேட்டுக்கொள்கிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அம்பாறையில் வெடிபொருட்கள் மீட்பு







(ஒலுவில்)

அம்பாறை மாவட்டம் பாலமுனை, சின்னப்பாலமுனை கடற்கரைப் பகுதியில் நேற்று வெடிபொருட்கள் சிலவும் சயனற் குப்பியும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

ஒலுவில் துறைமுகத்தினை அண்டிய சின்னப்பாலமுனை கடற்கரையோரப் பிரதேசத்தில் காணப்பட்ட வெடிபொருட்கள் பற்றிய தகவல் கடற்படையினருக்குத் இரகசியத் தகவல் மூலம் கிடைக்கப் பெற்றதனையடுத்து அப்பிரதேசத்திற்கு விரைந்த கடற்படையினர், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோர் குறித்த வெடிபொருட்களை மீட்டுள்ளனர்.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஆறு வெடிகுண்டுகள், துப்பாக்கி ரவைகள் சிலவும் சயனற் குப்பியும் ஒரு பையினுள் இடப்பட்ட நிலையில் கடற்கரையோரம் வீசப்பட்டுள்ள நிலையில் பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் காலை குறித்த பகுதியில் இவ்வெடிபொருட்கள் வீசப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. உள்ளூரில் தயாரிக்கப்பட்ட குண்டு என அடையாளம் காணப்பட்டுள்ள ஆறு வெடி குண்டுகளில் இரண்டினை படையினர் செயலிழக்கச் செய்தனர். மீதமான வெடி குண்டுகளையும் சயனற் குப்பியினையும் சில துப்பாக்கி ரவைகளையும் படையினர் மீட்டு கொண்டு சென்றுள்ளனர்.

இப்பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் நேற்று பாதுகாப்புப் படைத்தரப்பினரின் விசேட தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அவிசாவளையில் வீடொன்றிலிருந்து பெற்றோல் குண்டுகள், வாள்கள் மீட்பு



(அவிசாவளை)


அவிசாவளை, கொட்டியாக்கும்புரவில் வீடொன்றிலிருந்து பெற்றோல் குண்டுகள் மற்றும் வாள்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள வீடொன்றை பொலிஸார் நேற்றுக்காலை சோதனையிட்ட போதே பெற்றோல் குண்டுகளும் வாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை அவிசாவளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் பாரிய சுற்றிவளைப்பு தேடுதல்; 24 பேர் கைது -ஹயஸ் வாகனம்- 4 வாள்கள் மீட்பு



(குருமன்காடு)

நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொடர் சோதனை மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது நேற்று வரை 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 4 வாள்கள் மற்றும் ஹயஸ் ரக வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து நாடு பூராகவும் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. வடக்கில் தாக்குதல் நடத்த திட்டமிட்ட தீவிரவாதிகள் வவுனியாவில் பதுங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் வவுனியாவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா நகரம், பசார் வீதி, பட்டக்காடு, பட்டானிச்சூர், புளியம்குளம், அரபா நகர், மதீனாநகர், வேப்பங்குளம், சூசைப்பிள்ளையார்குளம், தர்மலிங்கம் வீதி, மில்வீதி என பல்வேறு பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்கள், வீடுகள், பொது கட்டடங்கள், வீதிகள், வாகனங்கள் என்பன சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன் மோப்ப நாய்களுடன் சுற்றிவளைப்பு தேடுதல்களும் இடம்பெற்றன.

இதில் சந்தேகத்தின் பேரில் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இரு வேறு இடங்களில் 4 வாள்களும், ஒரு ஹயஸ் ரக வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது. இவை தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. அத்துடன், வவுனியாவில் பாதுகாப்பிற்காக 31 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறிப்பாக நேற்றைய தினம் காலை 7.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் மோப்ப நாயின் உதவியுடன் பொலிஸார் தீவிர தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

மேலும், கனகராயன்குளம் பகுதியில் ஒரு தொகுதி வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (9-250)

## வீதிப்புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

(கிளிநொச்சி)

இயக்கச்சி சங்கத்தார்வயல் மில் வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இயக்கச்சி சங்கத்தார்வயல் மில் வீதி புனரமைப்பு வேலைகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாகப் புனரமைப்பின்றிக் காணப்பட்ட குறித்த வீதி 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கம்பரெலியா-ஊரெழுச்சி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆரம்ப நிகழ்வில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை தவிசாளர் சு.சுரேன், உபதவிசாளர் மு.கஜன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை உறுப்பினர்களான வீரவாகுதேவர், ரமேஸ், கோகுல்ராஜ், அருள்செல்வி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பரந்தன் வட்டார அமைப்பாளர் சிவேந்திரன் மற்றும் சங்கத்தார்வயல் கிராம அலுவலர் மற்றும் சங்கத்தார்வயல் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (9)




## நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால்

# வவு.நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரத்துக்கு தடை

(குருமன்காடு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு வவுனியா நகரின் முக்கிய பகுதிகளில் நடை பாதைகளில் வியாபாரம் மேற்கொள்ள வேண்டாம் என வவுனியா நகர சபை தலைவர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவங்களை அடுத்து நாட்டில் அசாதாரண நிலை ஏற்பட்டுள்ளது. எனவே நகரின் முக்கிய பகுதிகளில் குறிப்பாக இலுப்பையடி மற்றும் சந்தை சுற்றுவட்ட வீதி ஆகிய பகுதிகளில் வியாபாரம் செய்யும் நடைபாதை வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் அதிக நெரிசலான நிலை ஏற்படுகின்றது. இவ்விடயம் தொடர்பாக பொலிஸாரும் எமக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

எனவே நாட்டின் தற்போதைய நிலை சீராகும் வரைக்கும் நடைபாதை வியாபாரிகள் முக்கிய பகுதிகளில் தரித்து நின்று வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தல் விடுத்துள்ளோம். இது அனைவரது பாதுகாப்பு கருதி எடுக்கப்பட்ட முடிவு. நாட்டு நிலைமை சீரானதன் பின்பு நடைபாதை வியாபாரிகள் தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்தார். (9-250)

# எத்தடை வரினும் இறுதிவரை போராடுவோம்

## கேப்பாபிலவு மக்கள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் - நிலமீட்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தாம் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையினால் அச்சமடைந்துள்ளதாக கேப்பாபிலவு மக்கள் தெரிவிக்கின்றனர்.

அச்சத்திற்கு மத்தியில் போராட்டத்தை முன்னெடுத்துள்ள தங்களின் காணிகளை விரைவில் விடுவிக்க ஆவன செய்யுமாறு கேப்பாபிலவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு கிராமத்தில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது பூர்வீக காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக மக்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டம் 782 ஆவது நாளை எட்டியுள்ள நிலையில், நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்கள் தம்மை அச்சத்திற்குள் தள்ளியுள்ளதாக கேப்பாபிலவு மக்கள் குறிப்பிடுகின்றனர்.

தொடர்ச்சியாக போராட்டக்களத்தில் இருந்து தாம் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாபிலவு மக்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். இருப்பினும் எத்தடை வரினும் இறுதிவரை போராடுவோம் என தெரிவித்துள்ளனர். (9-281)




**இலங்கை முதலுதவிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு அனர்த்த முதலுதவி பயிற்சி மற்றும் தலைமைத்துவ பயிற்சிகள் வழங்கப்பட்டன. இலங்கை முதலுதவிச்சங்க மன்னார் மாவட்ட ஆணையாளர் ஜெயச்சந்திரன் வால்மேகம் (பொதுச் சுகாதார பரிசோதகர்) தலைமையில் கடந்த 27 ஆம் திகதி மன்னார் நானாட்டான் அருள்மிகு ஸ்ரீ செல்வ முத்துமாரியம்மன் பொதுமண்டபத்திலும் கடந்த 28 ஆம் திகதி மன்னார் மடுக்கரை கிராம அபிவிருத்திசங்க பொது மண்டபத்திலும் இடம் பெற்றது. இளைஞர்களுக்கான அனர்த்த முதலுதவி பயிற்சி, தலைமைத்துவ பயிற்சிகள் இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபை ஆணையாளர் வை.மோகனதாஸ், வளவாளர் க.அருந்தவராசா ஆகியோரால் வழங்கப்பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டு வெடிப்பில் இறந்தவர்களுக்கான அஞ்சலியுடன்

# அமைதியான முறையில் இடம்பெற்ற மேதின நிகழ்வுகள்



கிளிநொச்சி

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இவ்வாண்டுக்கான தமிழ்த்தேசிய மே நாள் (உலகத் தொழிலாளர் தினம்) வடக்கு மாகாணம் தழுவிய வகையில் 'ஒன்றுபடுவோம், போராடுவோம், உரிமைகளை வென்றெடுப்போம்' என்ற தொனிப்பொருளில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை நகர மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9)




வவுனியா

இலங்கை முழுவதும் மேதின நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில் வவுனியாவில் சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பினரால் அமைதியான முறையில் மேதின நிகழ்வு கள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டன.

சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ந. தேவகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தீவிரவாதிகளின் தொடர் தற்கொலைத் தாக்குதல்களில் உயிரிழந்த அப்பாவி பொது மக்களுக்கும் மற்றும் வவுனியாவில் கடமை நேரத்தில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த நகர சபை தொழிலாளர் நால்வருக்கும் இரண்டு நிமிட மௌன அஞ்ச லியுடன், மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பு, பசுமைத் தொழிலாளர் நலன் புரிச் சங்கம், நகர சிறு வியாபாரிகள் சங்கம், உழைக்கும் பெண்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தொழிலாளர் தொழில் சங்கம், மக்கள் திட்ட ஒன்றியம் வட மாகாணம், ஜனராஜா சுகாதார பொதுச்சேவை சங்கம், இடது குரல் அமைப்பு ஆகிய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். (9-250)



மன்னார்

மன்னார் பகுதியில் இம்முறை இறை வழிபாட்டுடன் மட்டுமே மிக எளிமையான முறையில் தொழிலாளர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இம்முறை நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

மன்னார் மாவட்டத்தை பொறுத்தமட்டில் கத்தோலிக்கர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் திருப்பலிகள் கடற்கரைப் பகுதிகளிலே ஒப்புக்கொடுக்கப்பட்டு கடலில் புனித சூசையப்பர் திருச்சுருபம் படகுகளில் எடுத்துச் செல்லப்பட்டு கடல் மற்றும் கடலிலுள்ள மீன்பிடி உபகரணங்கள் ஆசீர்வதிக்கும் நிகழ்வுகள் இடம் பெறுவதும் வழமையாகும்.

ஆனால் இம்முறை பாதுகாப்பு கருதி இந் நிகழ்வுகள் தவிர்க்கப்பட்டு காலையில் ஆலயங்களில் பலத்த பாதுகாப்புடன் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதையும் அத்துடன் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மீனவர்கள் செறிந்து வாழும் வங்காலை, பேசாலை மீனவ கத்தோலிக்க சமூகம் திருப்பலிக்குப் பின் அயலிலுள்ள கடற்கரைக்கு திருச்சுருபத்தை எடுத்துச் சென்று கடல் மற்றும் பொதுவான ஒரு இடத்தில் வைக்கப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் ஆசீர்வதிக்கப்படும் நிகழ்வுகளும் இடம்பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (9-285)

## மே தினத்தை துக்க தினமாக அனுஷ்டித்த புதுக்குடியிருப்பு வர்த்தகர்கள்




சர்வதேச தொழிலாளர் தினமான நேற்று நாட்டில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்கள் மற்றும் ஏனைய பல்வேறு சம்பவங்களிலும் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்பதை வலியுறுத்தி புதுக்குடியிருப்பு வணிகர் கழகத்திற்கு உட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்களும் முற்றுமுழுதாக பூட்டப்பட்டு கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டு நேற்று சர்வதேச தொழிலாளர் தினத்தை துக்க தினமாக அனுஷ்டிப்பதாக புதுக்குடியிருப்பு வணிகர் கழகத்தினுடைய தலைவர் செல்வச்சந்திரன் தெரிவித்தார்.

அதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏனைய நகர்ப் பகுதிகளிலும் நேற்றைய தினம் சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அனைத்து கடைகளும் பூட்டப்பட்டு நகர்ப் பகுதிகள் அனைத்தும் வெறிச்சோடிய நிலையில் காணப்படுவதை அவதானிக்க கூடியதாக இருந்தது. (9-281)

# பாதிக்கப்பட்ட மக்கள் அமைதி காப்பது வரவேற்கத்தக்கது-மன்னார் சர்வமத பேரவை

## பாதுகாப்பு எனும் போர்வையில் அப்பாவி மக்கள் துன்புறுத்தப்படக்கூடாது எனவும் தெரிவிப்பு

(மன்னார்)

பயங்கரவாத தாக்குதலில் பாதிக்கப்பட்ட சமூகங்கள் வன்முறையில் ஈடுபடாமல் அமைதி காத்துவரும் நிலை வரவேற்கத்தக்கது என தெரிவித்துள்ள மன்னார் மாவட்ட சர்வமத பேரவை, பாதுகாப்பு நடவடிக்கை எனும் பெயரில் அப்பாவி மக்கள் துன்புறுத்தப்படக் கூடாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மன்னார் சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம் பற்ற அவசர கலந்துரையாடலை தொடர்ந்து. விடுத்துள்ள ஊடக அறிக்கையிலே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

உயிர்ப்பு ஞாயிறு அன்று தேவாலயங்களிலும், நட்சத்திர விடுதிகளிலும் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்கள் காரணமாக முழு நாடும் அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாகியிருக்கின்றது.

ஏதுமறியா அப்பாவி மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ள நிலையில் இந்த நாடு மிகுந்த சோகத்தில் மூழ்கியுள்ளது.

தமது இன்னுயிர்களை இழந்த மக்களுக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்று ஒருவாரம் கடந்துள்ள நிலையில், இன்றைய சூழ்நிலை தொடர்பாக நாம் எமது அக்கறையைச் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தமது அன்புக்குரியவர்களை இழந்து நிற்கும் உறவுகளின் கவலையும் கண்ணீரும் ஒருபுறம், இன்னும் என்ன நடக்குமோ என்ற பயமும் பதற்றமும் மறுபுறம். தாக்குதலை நடத்தியவர்கள் இனம்காணப்பட்டுள்ள சூழ்நிலையில் இந்நாட்டில் உள்ள முஸ்லிம் மக்களுக்கு எதிரான கோபமும் அவர்களைச் சந்தேகத்துடன் பார்க்கும் நிலையும் உருவாகியுள்ளது.

அதேவேளை முஸ்லிம் மக்களும் அச்சத்துடன் வாழும் ஓர் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதல் சம்பவத்தோடு தொடர்புடையவர்களைக் கைது செய்து விசாரணை செய்யும் நடவடிக்கைகளை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டுள்ள நிலையில் அப்பாவிகளான பொது மக்கள் எந்த வகையிலும் பாதிக் கப்படக்கூடாதென நாம் வேண்டு கோள் விடுக்கின்றோம்.

பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் அப்பாவி மக்கள் துன்புறுத்தப்படக்கூடாது. அனைவரது அடிப்படை மனித உரிமைகளையும் மதித்து உண்மைகளைக் கண்டறிய முனைய வேண்டும்.

இந்தக் குற்றச்செயல்களைச் செய்த குறிப்பிட்டதொரு குழுவினருக்காக இந்நாட்டில் வாழும் முழு இஸ்லாமிய சமூகத்தையும் சந்தேகக்கண்கொண்டு பார்ப்பதோ, அவர்களுக்கெதிரான வெறுப்புணர்வை வளர்ப்பதோ தவிர்க்கப்பட வேண்டும்.

இதுபோன்ற துர்ப்பாக்கிய நிகழ்வுகள் இனியும் நடைபெறாதிருப்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும். அப்பாவி மக்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

இழப்புகளைச் சந்தித்த மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதோடு, அவர்களுக்கு உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்தல்களை மேற்கொள்வதற்கும் ஆவன செய்ய வேண்டும். பயத்திலும் பதற்றத்திலும் வாழும் அனைத்து சமூக மக்களும் தமது சுமுகமான வாழ்க்கை நிலைக்கு திரும்புவதற்குரிய வழிவகைகளை நாம் அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (9-285)

# மன்னாரில் சுற்றிவளைப்பு தேடுதல்

## மௌலவி உட்பட 17 பேர் விளக்கமறியலில்

(மன்னார்)

கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் ஏற்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து மன்னாரில் இஸ்லாமியர் செறிந்து வாழும் பகுதிகள் கடந்த ஓரிரு தினங்களாக சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 17 பேர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தொடர் விசாரணைக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஓரிரு தின ங்களாக மன்னார் பகுதியிலுள்ள இஸ்லாமியர் வாழும் கிராம பகுதிகளும் பாதுகாப்பு படையின ரின் கடும் சோதனைக்கு உட்ப டுத்தப்பட்டு வருகின்றன.

இதன்போது மன்னார் மூர் வீதி, புதுக்குடியிருப்பு, விடத்தில் தீவு ஆகிய முஸ்லிம் பகுதிகள் முப்படைகளாலும் சுற்றி வளைக்கப்பட்டதில் மன்னார் புதுக்குடியிருப்பில் கைது செய்யப்பட்ட 13 சந்தேக நபர்களை மன்னார் பொலிஸார்நேற்று முன்தினம்செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இவர்களை தொடர்ந்து விசாரிக்க வேண்டிய நிலை இருப்பதால் இவர்களை எதிர் வரும் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைத்து விசாரிக்க மன்றில் அனுமதியை பொலிஸார் கோரியதைத் தொடர்ந்து எதிர்வரும் திங்கட்கிழமை வரை இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இதே தினம் விடத்தல்தீவு பகுதியில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டு மன்றில் ஆஜராக்கப்பட்டனர்.

இவர்களையும் பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய் கிழமை மன்னார் மாவட்ட நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில் ஆஜர்படுத்திய போது இவர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை வரை விளக்க மறியலில் வைக்க நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (9-186-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இராணுவ ஆட்சியாளர்கள் உடனான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்!

(கார்டூம்)

சூடானில் இராணுவ ஆட்சியாளர்கள் உடனான பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளமையினை ஆர்ப்பாட்டக்காரர்கள் வரவேற்றுள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி கடும் எதிர்ப்புகள் காரணமாக ஜனாதிபதி ஓமர் அல் பஷீர் இராணுவத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதன் பின்னர் 10 பேர் கொண்ட இராணுவ ஆட்சிக் குழு நியமிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பிரகாரம் புதிதாக அமையவுள்ள மக்கள் மற்றும் இராணுவம் இணைந்த ஆட்சிக் குழுவானது 10 பேர் கொண்ட இராணுவ ஆட்சிக் குழுவிற்கு பதிலாக நியமிக்கப்படவுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர்,

'பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

ஆட்சிக் குழுவை அமைப்பதற்காகவும் மக்களாட்சியை ஏற்படுத்துவதற்காகவும் நாம் காத்திருக்கிறோம்' என குறிப்பிட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் அடிப்படைக் கோரிக்கையான நாளாந்த நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கான புதிய மக்களாட்சியை ஏற்படுத்தும் வரை அனைத்து அரசாங்க நடவடிக்கைகளையும் இந்த புதிய ஆட்சிக் குழு முன்னெடுக்கவுள்ளது.

இதேவேளை, மக்கள் நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படும் வரை தமது முற்றுகைப் போராட்டம் தொடரும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளமைக் குறிப்பிடத்தக்கது. (7)

# வாழைப்பழ ஓவியத்துக்கு தடை; போலந்தில் மக்கள் போராட்டம்




(வார்சா)

போலந்து தேசிய அருங்காட்சியகத்தில் புதிய இயக்குநராக பதவியேற்றுள்ள ஜெர்சி மிசியோலெக் அங்குள்ள வாழைப்பழ ஓவியத்தை அகற்றியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போலந்தின் தலைநகர் வார்சாவில் தேசிய அருங்காட்சியகம் ஒன்று உள்ளது. இங்கு கடந்த 1973ஆம் ஆண்டு நடாலியா எல்.எல்.என்கிற பெண் ஓவியரால் வரையப்பட்ட ஓவியம் ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஓவியம், பெண் ஒருவர் 12 விதமாக வாழைப்பழத்தை உட்கொள்வது போன்று அமைந்திருக்கும். இந்த நிலையில், அண்மையில் இந்த அருங்காட்சியகத்தின் புதிய இயக்குநராக பொறுப்பு ஏற்றுக்கொண்ட ஜெர்சி மிசியோலெக் என்பவர், அருங்காட்சியகத்தை மறுசீரமைக்க நடவடிக்கை எடுத்தார்.

அப்போது, வாழைப்பழ ஓவியம், இளைஞர்களுக்கு எரிச்சலூட்டும் வகையில் இருப்பதாக கூறி அதனை அருங்காட்சியகத்தில் இருந்து அகற்றினார். இந்த விவகாரம் அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. அந்நாட்டை சேர்ந்த பிரபல ஓவியர்கள், எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் அருங்காட்சியக இயக்குநரின் இந்த முடிவுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

அவர்கள் தங்களின் எதிர்ப்பை பதிவு செய்யும் விதமாக வாழைப் பழம் உட்கொள்வது போன்று 'செல்பி' எடுத்து 'பேஸ்புக்', 'டுவிட்டர்' உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளார். (7)

# இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஜப்பானின் முதல் பேரரசர் பதவியேற்பு!



(டோக்கியோ)

ஜப்பானியப் பட்டத்து இளவரசர் நருஹிட்டோ புதிய ரெய்வா யுகத்தில் பேரரசராகப் பதவியேற்றுள்ளார்.

ஜப்பானின் 126 ஆவது பேரரசராக அவர் நேற்று புதன்கிழமை அதிகாரபூர்வமாய் தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார்.

அவரின் தந்தை பேரரசர் அக்கிஹிட்டோ நேற்று முன்தினம் அரியணையைத் துறந்தார். 200 ஆண்டுகளில் அரியணை துறந்திருக்கும் முதல் ஜப்பானியப் பேரரரசர் அவராவார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பிறந்த பட்டத்து இளவரசர் நருஹிட்டோ, அதன் பின்னர் அரியணை ஏறும் முதல் பேரரசர் என்ற பெருமையை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# ஆட்சிக் கவிழ்

# வெனிசுவெலா



(கராகஸ்)

வெனிவெலாவில் ஆட்சியைக் கவிழ்க்கும் வகையில், அரசுக்கு எதிராக பல்வேறு இடங்களில் நடந்த போராட்டங்களில் கலவரம் வெடித்தது.

வெனிசுவெலாவின் ஜனாதிபதியாக நிகோலஸ் மதுரோ கடந்த ஆண்டு மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். ஆனால், பாராளுமன்றத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள எதிர்க்கட்சி, இந்த தேர்தல் முடிவை ஏற்கவில்லை. எதிர்க்கட்சி தலைவர் ஜுவான் கெய்டோ, தன்னை இடைக் கால ஜனாதிபதியாக பிரகடனம் செய்தார்.

இராணுவத்தினர் தங்களுக்கு ஆதரவாக இருந்து, மதுரோவை வெளியேற்ற போராடும்படி கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து வெனிசுவெலாவில் தொடர்ந்து போராட்டங்கள், வன்முறை என பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இந்நிலையில், சமூக வலைத்தளம் மூலம் கெய்டோ வெளியிட்ட ஒரு காணொலி பதிவு வைரலாக பரவியது. முதன் முறையாக ராணுவ வீரர்களுடன் தோன்றி பேசிய அவர், அரசியல் சாசனத்தை காக்க வேண்டும் என்ற தனது கோரிக்கையை வீரர்கள் ஏற்றுக் கொண்டு,

# முஸ்லிம் சகோதரத் தீவிரவாத அமைப்பா

(வோஷிங்டன்)

உலகின் மிகவும் செல்வாக்குடைய இஸ்லாமிய இயக்கங்களில் ஒன்றான முஸ்லிம் சகோதரத்துவ சமூகத்தை சர்வதேச தீவிரவாத அமைப்பாக பெயரிடுவதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் பணியாற்றி வருகிறது.

இதனை வெள்ளை மாளிகை நேற்று முன்தினம் (செவ்வாய்க் கிழமை) அறிவித்துள்ளது.

## வெள்ளை மாளிகை

ட்ரம்ப் நிர்வாகத்தின் இச் செயற்பாட்டினால் மத்திய கிழக்கில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட எகிப்தின் பழைமையான இஸ்லாமிய இயக்கத்திற்கு எதிராக பொருளாதார மற்றும் பயணத்தடைகள் விதிக்கப்படக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எகிப்து ஜனாதிபதி அப்தெல் பட்டாஹ் அல்-சிசி கடந்த ஏப்ரல் மாதம் வெள்ளை

# இஸ்ரேல் பிரதமராக நெதன்யாகு பதவியேற்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேல் நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் லிக்குட் கட்சி தலைமையிலான கூட்டணி பெரும்பான்மை பெற்றதையடுத்து, நெதன்யாகு மீண்டும் பிரதமராக பதவியேற்றார்.

இஸ்ரேல் நாட்டில் 'கென்னெசெட்' என்றழைக்கப்படும் நாடாளுமன்றத்துக்கு கடந்த 9 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது.

இந்த தேர்தலில் தற்போதைய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான வலதுசாரி லிக்குட் கட்சி மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி பென்னி கான்ட்ஸ் தலைமையிலான புளு அன்ட் வயிட் கட்சிக்கு இடையில் கடும் போட்டி நிலவியது.

இதில், நெதன்யாகுவின் லிக்குட் கட்சி மற்றும் புளு அண்ட் ஒயிட் கட்சி தலா 35 இடங்களில் வெற்றிபெற்றது. லிக்குட் கட்சிக்கு வலதுசாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ிழ்ப்பு முயற்சி;
## ...ாவில் கலவரம்



ர.
...க்கு
...வெளி
...ாண்
...வில்
...றை
...றது.
...ளம்
...ஒரு
...யது.
...டன்
...சாச
...னது
...ண்டு.

மதுரோவுக்கு எதிரான போராட்டத்தில் இணைந்திருப்பதாகவும், மதுரோவை வெளியேற்ற ராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் தொடர்ந்து போராட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார். ஆயுதப்படையினர் மதுரோவிற்கு எதிராக இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த காணொளி பதிவு செய்யப்பட்ட கராகஸ் இராணுவத்தளத்தின் அருகில், கெய்டோவின் ஆதரவாளர்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது. இதில் 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து கெய்டோவின் ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்கள் கராகஸ் நகரின் பல்வேறு பகுதிகளில் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் விரட்டியடித்தனர். இராணுவ தளத்திற்கு வெளியே கெய்டோவின் ஆதரவாளர்கள் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டதால் பதற்றம் உருவானது. அவர்களை இராணுவ வீரர்களும், இரு தரப்புக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இதனையடுத்து மற்ற இடங்களிலும் கலவரம் வெடித்தது. (7)

## ...ரத்துவ சமூகத்தை
## ...ப்பாக பெயரிட திட்டம்

### ...ாளிகை அறிவிப்பு

...பாட்
...லிய
...ளக்
...இஸ்
...ாரு
...திக்
...றது.
...ஹ்
...ளை

மாளிகைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இதன்போது முஸ்லிம் சகோதரத் துவ சமூகத்தை தீவிரவாத அமைப்பாக பெயரிடுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியிருந்தார்.

அதற்கமைய ட்ரம்ப் நிர் வாகத்தின் இது தொடர்பான செயற்பாட்டை வெள்ளைமாளிகையின் ஊடக செயலாளர் சாராஹ் சண்டர்ஸ் உறுதிப்படுத்தியுள்ளார். முஸ்லிம் சகோதரத்துவ சமூகத்தை எகிப்து ஏற்கனவே தீவிரவாதிகள் என விபரித்து வருகின்றது.

இந்நிலையில், அமெரிக்காவும் அதனை தீவிரவாத அமைப்பாக பெயரிட்டால் அதனுடன் தொடர்பை பேணி வரும் தனி நபர்கள் மற்றும் நிறுவ னங்கள் மீதான தடைகள் அமுலுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## ...ாக
## ...பற்பு



...திகதி தேர்தல்

...பிரதமர் பெஞ்
...ன வலதுசாரி
... இராணுவத்
...யிலான புளு
...கடும் போட்டி

... கட்சி மற்றும்
... இடங்களில்
... வலதுசாரி

கட்சிகளும் ஆதரவு அளித்தன. எனவே, நெதன்யாகு மீண்டும் பிரதமர் ஆவதற்கு 65 உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்தது.

இதையடுத்து நெதன்யாகு தலைமையிலான புதிய நாடாளுமன்றம் நேற்று முன்தினம் பதவியேற்றது.

பிரதமராக நெதன்யாகு 5 ஆவது முறையாக பதவியேற்றுக்கொண்டார். தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற உறுப்பினர்களும் பதவியேற்றுக்கொண்டனர். (7)

## தேவாலயத்தில் துப்பாக்கிச் சூடு ஆறு பேர் பரிதாபமாகப்பலி

(டிஜிபோ)

புர்கினியா பாசோ நாட்டில் மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் தேவாலயம் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான புர்கினியா பாசோ. சவும் மாகாணத்தின் தலைநகர் டிஜிபோ அருகில் உள்ள சிறு நகரத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் நேற்று முன்தினம் பிரார்த்தனை கூட்டம் நடைபெற்றது.

அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கி ஏந்திய கும்பல் ஒன்று தேவாலயத்திற்குள் புகுந்து கண்மூடித்தனமாக சுட்டனர்.

இதில் பாதிரியார், அவரது மகன்கள் இருவர் மற்றும் பிரார்த்தனைக்கு வந்த மூவர் என 6 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். (7)

## அமெரிக்காவில் மர்மநபர் துப்பாக்கிச்சூடு சீக்கிய குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் பலி!

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் சீக்கிய குடும்பத்தைச் சேர்ந்த 3 பெண்கள் உட்பட 4 பேர் அவர்களின் வீட்டுக்குள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அமெரிக்காவின் ஒகியோ மாநிலம் வெஸ்ட்செஸ்டர் பகுதியில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் சீக்கிய குடும்பத்தினர் வசித்து வந்தனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அந்த வீட்டிற்குள் புகுந்த ஒரு மர்ம நபர், வீட்டில் இருந்தவர்களை சரமாரியாக துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளார். இதில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் இரத்தவெள்ளத்தில் துடிதுடித்து இறந்தனர்.

உயிரிழந்த 4 பேரும் ஹக்கிகத் சிங் பனாக் (59), அவரது மனைவி பரம்ஜித் கவுர் (62), அவர்களின் மகள் ஷாலிந்தர் கவுர் (39), ஹக்கிகத் சிங் பனாக்கின் மைத்துனி அமர்ஜித் கவுர் (58) ஆகியோர் என்பது விசாரணையில் தெரியவந்தது.

அவர்களின் குழந்தைகள் தாக்குதல் நடந்தபோது வீட்டில் இல்லாததால் உயிர்தப்பினர். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகம் இரங்கல் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பொலிஸாருடன்தொடர்புகொண்டு, குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியும் உள்ளது. (7)

## பல்கலைக்கழகத்தில் துப்பாக்கிச்சூடு இருவர் உயிரிழப்பு; நால்வர் படுகாயம்

(ரலீற்)



வடக்கு கரோலினாவில் சார்லட் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் நால்வர் காயமடைந்த நிலையில். அவர்களில் மூவரது நிலை கவலைக்கிடமாக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக பல்கலைக்கழக மாணவன் என சந்தேகிக்கப்படும் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் ட்றிஸ்ரன் அன்ட்ரூ ரெறெல் (வயது -22) என பொலிஸார் அறிவித்துள்ளனர். அவர் மீது இதுவரை எவ்வித குற்றச்சாட்டுகளும் பதிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## வெடிகுண்டை வெடிக்கச்செய்து பயங்கரவாதிகள் தற்கொலை

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு படையினருக்கும், பயங்கரவாதிகளுக்கும் நடந்த சமரில், இரு பயங்கரவாதிகள் வெடிகுண்டை வெடிக்கச் செய்து தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் டாக்காவிற்கு அருகே முகமத்பூர் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக அந்நாட்டு உளவுப் பிரிவின் தகவலுக்கு அமைய பயங்கரவாத தடுப்பு பிரிவு படை அங்கு சோதனை மேற்கொண்டது.

அப்போது ஒரு வீட்டில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதை அறிந்து, உடனடியாக அப்பகுதியில் இருந்த மக்களை வெளியேற்றி, அவ்வீட்டை சுற்றி வளைத்தனர். இருதரப்புக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சமர் நடந்தது. இறுதியில், பயங்கரவாதிகள் தாங்கள் வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தனர்.


இதில் அவர்கள் உடல் சிதறி பலியாகினர். பயங்கரவாதிகள் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளர் மற்றும் அவருடைய மனைவியை பாதுகாப்புப் படை வீரர்கள் கைது செய்துள்ளனர். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றாகப் பயணிக்க வேண்டாம் மைத்திரி, ரணில், மகிந்தவுக்கு புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

**வரும் வாரங்களில், நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்களை ஒன்றாகப் பயணம் செய்ய வேண்டாம் என்று அரச புலனாய்வுச் சேவைகள் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்தும் சாத்தியங்கள் இருப்பதாக கிடைத்துள்ள தகவல்களையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**



பொது நிகழ்வுகளிலிருந்து குறிப்பாக, தேவாலயங்கள், ஆலயங்கள், ஏனைய மத வழிபாட்டு இடங்களில் நடக்கும் நிகழ்வுகளில் இருந்து தலைவர்களை விலகி இருக்குமாறும், அவர்கள் பங்கேற்பது முக்கியம் எனின், உலங்கு வானூர்திகளைப் பயன்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கையை விட்டு வெளியேறுமாறு சவுதி நாட்டவர்களுக்கு அரசு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள தமது நாட்டவர்கள் அனைவரையும் உடனடியாக வெளியேறுமாறு சவுதி அரேபிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள சவுதி அரேபியத் தூதரகத்தை மேற்கோள்காட்டி, அந்த நாட்டின் அரச தொலைக்காட்சியான அல் எக்பாரியா இந்த அறிவிப்பை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலவரங்களைக் கருத்தில் கொண்டு, சவுதி அரேபிய நாட்டவர்களை இலங்கையிலிருந்து வெளியேறுமாறு தூதரகம் கேட்டுக் கொள்வதாக, சவுதி அரேபியத் தூதரகத்தின் டுவிட்டரில் பதிவிடப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கள் மற்றும் அதையடுத்து நடத்தப்படும் தேடுதல்கள், விசாரணைகள், பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டே சவுதி அரேபிய அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாகத் தெரிவித்துள்ளது. (இ-7)

## வவுணதீவில் பொலிஸார் கொலை

# கைதான முன்னாள் போராளியை விடுவிக்க ஜனாதிபதி இணக்கம்

(கொழும்பு)

கடந்த நவம்பர் மாதம் மட்டக்களப்பு வவுணதீவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டினால் கொல்லப்பட்ட இரண்டு பொலிஸாரின் படுகொலைகள் தொடர்பில் கைதான முன்னாள் போராளி அஜந்தனை விடுவிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சர் மனோ கணேசனிடம் உறுதியளித்துள்ளார்.



தற்போது கிடைக்கப்பெற்றுள்ள புதிய தகவல்களின் அடிப்படையில் பொலிஸாரை கொலை செய்தது தேசிய தௌஹீத் ஜமாத்தின் மொஹமட் சஹ்ரான் குழுவினர் என தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் இவ்விடயத்தில் அப்பாவியான நான்கு பிள்ளைகளின் தந்தையான முன்னாள் போராளி கதிர்காமத்தம்பி ராசகுமாரன் என்ற அஜந்தனை விடுவிக்குமாறு அமைச்சர் மனோகணேசன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து, அவரை உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி பதில் பொலிஸ்மா அதிபருக்கும் சட்டமா அதிபருக்கும் பணிப்புரை விடுப்பதாக அமைச்சர் மனோ கணேசனிடம் ஜனாதிபதி வாக்குறுதியளித்துள்ளதாக மனோ கணேசன் தனது முகப் புத்தக பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பில் அஜந்தனின் மனைவியான செல்வராணி ராசகுமாரனுக்கு அமைச்சர் மனோ கணேசனின் அலுவலகம் அறிவித்துள்ளதாகவும் அவர் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தன்வினை தன்னைச்சுடும்

ஸ்வயங் கிருத அபராதம் என்றால் என்னவென்று தெரியுமா உங்களுக்கு?

நாம் செய்கின்ற தவறு எமக்கே இடைஞ்சலாக வந்து முடிகின்றது.

இதை விளக்குவதற்காக மயூரம் வேதநாயகம் பிள்ளை வேடிக்கையாக ஒரு கதை சொல்லி இருக்கின்றார். அவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் என்கின்ற நாவலில் இது வருகின்றது.

ஒரு கணவன்-மனைவி ஆகிய இவர்கள் இரண்டு பேருக்குள்ளேயும் எப்ப பார்த்தாலும் ஏதாவது சண்டை வந்து கொண்டே இருக்கும். அடிக்கடி ஒருத்தரைப் பார்த்து ஒருவர் திட்டிக் கொண்டே இருப்பார்கள். அப்படி ஒரு நாள் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் அவன் அவளைப் பார்த்து, உன்னை பழிவாங்குகின்றேன் பார்! என்றான். எப்படி பழிவாங்கப் போகின்றாய்? என்று அவள் கேட்டாள். கொல்லையிலே ஒரு பெரிய ஆழமான குளம் இருக்கின்றது...அதில்... என்று ஆரம்பித்தார்.

அதில்...? என்று அதட்டலாக கேட்டாள் அவள்! அதில் நான் போய் விழுந்து விடுவேன்! என்று முடிச்சான் அவன். அப்படிச் சொல்லியும் இவள் விடவில்லை. நீ அந்தக் குளத்தில் விழுவதை நான் என் கண்களால் பார்க்க வேண்டும். அந்தக் காரியத்தை இப்பவே செய்! வா! அப்படி என்று சொல்லி அவனைப்பிடித்து இழுத்துக் கொண்டு சென்றாள்.

இவன் பலி ஆடு போல் பின்னால் போய்க் கொண்டு இருந்தான். குளம் வந்துவிட்டது. இதோ இருக்கின்றது நீ சொன்ன குளம்! இதிலே குதித்து விடு என்றாள் அவள். விழுவதாகப் போல் தெரியவில்லை! இவன் குதிப்பதற்கு தயாரானான்.

தூரமாகப் போய் நின்று அங்கேயே வேகமாக ஓடி வந்து அந்த ஆழமான குளத்தில் பொத்தென்று விழுந்து விட வேண்டும்.

அவன் அதற்காக தூரத்தில் போய் நின்றான். ஒரு விநாடி யோசித்தான். இதற்குப் பின் வேகமாக ஓடி வந்தான். குளத்தின் அருகே வந்ததும் அப்படியே நின்று விட்டான். குதிக்கவில்லை! உடனே அவள் சும்மா இருப்பாளா? ஏன் குளத்தில் விழவில்லை? என்று சத்தம் போட ஆரம்பித்தாள். இவன் மெதுவாகச் சொல்ல ஆரம்பித்தான். அது வந்து வேற ஒன்றுமில்லை. எனக்கு நீச்சல் தெரியும். அதனால் நான் குளத்திற்குள் குதித்ததும் நீந்திக் கரைக்கு வந்தாலும் வந்து விடுவேன். நான் தப்பித்து வராத அளவிற்கு நீதான் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும் என்றான்.

என்ன செய்யணும்? சொல்லு என்றாள்!

என்னுடைய இரண்டு கைகளையும் நீ பின் கட்டு முறையாக சேர்த்துக் கட்டிப்போடு. அதற்குப் பின் நான் நீந்த வேண்டும் என்று நினைத்தாலும் அது முடியாது. அப்படி என்றார்.

அதுவும் நல்ல யோசனை தான் என்று நினைத்தாள். அதே மாதிரி அவனை குளத்து ஓரமாக நிற்க வைத்து கை இரண்டையும் பின் பக்கமாகச் சேர்த்துக் கட்டி விட்டாள்.

இப்ப எப்படி ஏற்பாடு என்றாள்.

அந்த ஆள் குளத்து ஓரமாக நின்று கொண்டான். அவள் தூரத்தில் இருந்து வேகமாக ஓடி வந்தாள். அவனை பிடித்து தள்ளி விடுவதற்கு! கிட்ட வந்ததும் பொசுக் என்று அவன் விலகி விட்டான். ஓடி வந்த வேகத்தில் அவளால் திடீரென்று நிற்க முடியவில்லை. நேராக ஓடி குளத்தில் விழுந்து விட்டாள். விழுந்ததும் தண்ணீரில் கையை காலை அடித்துக் கொண்டு ஆ, ஊ என்றும் கத்த ஆரம்பித்து விட்டாள். ஐயோ! என்னை வந்து கொஞ்சம் கைதூக்கி விடுங்களேன்... காப்பாற்றுங்கள்! என்று கத்தினாள்.

கரையில் நின்று கொண்டிருந்த அந்த ஆள் ரொம்ப நிதானமாகப் பேசினான். நான் என்ன செய்வது? உன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கின்றேன். இருந்தாலும் அது முடியவில்லை! ஏனென்றால் நீ தானே பின்பக்கமாக என் கையை கட்டிப் போட்டு விட்டாய்! இப்ப நான் என்ன செய்ய முடியும்? அப்படி என்று சொல்லி விட்டான். இதுதான் ஸ்வயங்கிருத அபராதம் என்கிறது.

இந்தக் காலத்தில் எல்லாம் கணவன்-மனைவிக்குள்ள தகராறு என்றால் யாரும் குளத்தை தேடிப் போவதில்லை. நேராக நீதிமன்றத்தை தேடிக் கொண்டு போய் விடுகின்றார்கள்.

ஒரு ஆசாமி அப்படித்தான் நீதிமன்றத்துக்குப் போனால் என் மனைவியோடு குடும்பம் நடத்த முடியாது. விவாகரத்து வேண்டும் என்று மனுக்கொடுத்தான். விசாரணை வந்தது.

அரசாங்க சட்டத்தரணி கேட்கின்றார்...

ஏன்... உங்க மனைவி கோபக்காரங்களா? அப்படி என்று! இல்லை என்கின்றான் இவன்.

அவங்க ஊதாரித்தனமாகச் செலவு செய்யிறாங்களா? என்று கேட்டார். இல்லை என்கின்றான்.

அவங்க நிறைய பொய் சொல்றாங்களா? இல்லை என்கின்றான்.

அவங்க உங்களை மதிக்கிறது இல்லையா? என்று கேட்டார் சட்டத்தரணி. அப்படி எல்லாம் ஒன்றுமில்லை என்கின்றான் இவன். அப்படி இருக்கின்ற போது எதற்கு விவாகரத்துக் கேட்கிறீங்க? என்று கேட்டார் அவர்.

இவன் மெதுவாக தலை நிமிர்ந்து அவரைப் பார்த்து நீங்க கேட்டது அத்தனை குறைகளும் என்னிடம் இருக்கின்றது அதனால் தான் கேட்கின்றேன்! அப்படி என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலனாய்வுப் பிரிவின் ஊதியப் பட்டியலில் தேசிய தௌஹீத் ஜமாத் உறுப்பினர்கள்

## அமைச்சர் ராஜித பகீர் தகவல்



(கொழும்பு)

இலங்கையில் தற்போது தடை செய்யப்பட்டுள்ள தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் 26 உறுப்பினர்களுக்கு புலனாய்வுப் பிரிவு ஊதியம் வழங்கி வந்துள்ளது என்று அமைச்சர் ராஜித சேனாரட்ன குற்றம்சாட்டியுள்ளார்.

அமைச்சரவைப் பேச்சாளரான ராஜித சேனாரட்ன கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையில்,

"தேசிய தௌஹீத் ஜமாத் மற்றும் அதன் தாக்குதல் திட்டங்கள் தொடர்பாக முன்னதாக வழங்கப்பட்ட எச்சரிக்கைகளை இலங்கைப் பாதுகாப்புப் பிரிவுகள் புறக்கணித்திருந்தன.

மட்டக்களப்பு- வவுணதீவு சோதனைச் சாவடியில் கடந்த 2018 நவம்பர் 30 ஆம் திகதி இரண்டு பொலிஸார் கொலை செய்யப்பட்ட தாக்குதலை குறைந்தது நால்வர் வழிநடத்தியுள்ளனர்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை அடுத்து, கல்முனையில் கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கி, வவுணதீவில் தாக்குதலின் பின்னர் எடுத்துச் செல்லப்பட்டதாகும்.

தற்போது தடை செய்யப்பட்டுள்ள தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் குறைந்தது 26 உறுப்பினர்கள் புலனாய்வுப் பிரிவின் ஊதியப் பட்டியலில் இருந்துள்ளனர். இவர்கள் கோத்தபாய ராஜபக்ஷவுடன் தொடர்பில் இருந்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள அப்துல் ராசிக் என்ற தேசிய தௌஹீத் ஜமாத் உறுப்பினர் புலனாய்வுப் பிரிவிடம் ஊதியம் பெறுபவர்" என்றும் ராஜித மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்களுக்கு பயிற்சியளித்தார் என்று இராணுவத்தின் முன்னாள் அதிகாரியான ஆமி மொஹிதீன் எனப்படும், பத்ருதீன் மொகமட் மொகிதீனை பொலிஸார் தேடி வருவதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு குறித்து அறிவில்லை

## விதுர எம்.பி. விமர்சனம்



(கொழும்பு)


தற்போதைய சூழலில், நாட்டை முப்படையினரிடம் ஒப்படைத்து விட்டு உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரண பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நாட்டை பாதுகாப்பது தொடர்பான அறிவு இல்லை எனவும் நாட்டின் பாதுகாப்பு தொடர்பான தீர்மானங்களை எடுக்க இராணுவத்திடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் கலந்துரையாடினாலும் அதில் எவ்வித பிரியோசனமும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# அமரர் ரணசிங்க பிரேமதாஸவின் 26 ஆவது ஞாபகார்த்த நிகழ்வு







(கொழும்பு)

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசஸவின் 26ஆவது ஞாபகார்த்த நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முற்பகல் கொழும்பு புதுக்கடையில் அமைந்துள்ள ரணசிங்க பிரேமதாஸவின் திருவுருவச் சிலையடியில் இடம்பெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, அமைச்சர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் திருமதி.ஹேமா பிரேமதாஸ உள்ளிட்ட குடும்ப உறவினர்களும் கலந்து கொண்டனர்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் உருவச் சிலைக்கு ஜனாதிபதி மலரஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, திருமதி. ஹேமா பிரேமதாஸ மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர். (இ-7)

# தற்கொலைத் தாக்குதலில் காயமடைந்தோரை வைத்தியசாலையில் சென்று பார்வையிட்டு ஆசி வழங்கிய கர்தினால் ரஞ்சித் ஆண்டகை








(கொழும்பு)

இலங்கையில் உயிர்த்த ஞாயிறன்று நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் காயமடைந்து [illegible] வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் உறவுகளை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும், மதகுருக்களும் நேரில்சென்றுபார்வையிட்டுள்ளனர்.

மேலும், அங்கு சென்ற பேராயர், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல்களையும் இறையாசீர் வாதங்களையும் வழங்கியுள்ளார்.

மேலும் அனைவரும் தற்கொலைப் படைத் தாக்குதலில் படுகாயமடைந்த உறவுகள் மிக விரைவில் சுகம் அடைந்து மீண்டும் வீடு திரும்ப வேண்டும் என தனிப்பட்ட ரீதியில் பிரார்த்திப்போம் எனவும் அவர் இதன் [illegible] (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாள்கள், வெடிபொருட்கள் மீட்பு தொடர்கிறது

# பெரும் இனக்கலவரத்தை உருவாக்க ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் திட்டம்

## விமல் வீரவன்ச அதிர்ச்சித் தகவல்



(கொழும்பு)

**சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு எதிராகப் பெரும் இனக் கலவரத்தை உருவாக்க ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் திட்டம் வகுத்துள்ளதோடு அதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட வாள்களும் கத்திகளுமே தற்போது பள்ளிவாசல்களில் இருந்தும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மற்றும் அவர்களின் உறவினர்களின் வீடுகளில் இருந்தும் பாதுகாப்புத் தரப்பினரால் மீட்கப்படுகின்றதாகவும் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

இலங்கையை இஸ்லாமிய நாடாக்குவதே ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் நோக்கமாக இருக்கின்றது.

கிறிஸ்தவ தேவாலயங்களில் மட்டுமன்றி பௌத்த விகாரைகள், இந்துக் கோயில்கள் ஆகிய வற்றிலும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தி மதக் கலவரத்தை அரங்கேற்றி ஒரு பகுதியினரை முழுமையாகக் கொலைசெய்வது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் முதலாவது திட்டம்.

அதன் பின்னர், சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு எதிராகப் பெரும் இனக்கலவரத்தை ஏற்படுத்தி எஞ்சியோரைக் கொலை செய்வது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் இரண்டாவது திட்டம்.

இதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட வாள்களும் கத்திகளுமே தற்போது பள்ளிவாசல்களில் இருந்தும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மற்றும் அவர்களின் உறவினர்கள் ஆகியோரின் வீடுகளில் இருந்தும் பாதுகாப்புத் தரப்பினரால் மீட்கப்படுகின்றன.

ஜனாதிபதியும் பிரதமரும் மற்றும் அரச தரப்பினரும் கைகட்டி வேடிக்கை பார்க்காமல் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளையும் அவர்களின் உறவினர்களையும் இந்நாட்டிலிருந்து இல்லாதொழிக்க வேண்டும்.

இந்த நாட்டை இஸ்லாமிய நாடாக்கி அதில் முஸ்லிம் மக்களை மட்டும் வாழ விடும் வகையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் வகுத்த திட்டத்துக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலரும் துணை போயுள்ளனர்.

அவர்கள் யார் என்று நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன்.

அவர்கள் ஜனாதிபதி, பிரதமரின் செல்லப்பிள்ளைகளாக இருக்கின்றார்கள்.

அவர்களையும் அரசு உடன் கைதுசெய்ய வேண்டும். அவர்களுக்கு உச்சபட்ச தண்டனையை வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## "இலங்கைத் தாக்குதல்களுடன் இந்தியாவுக்கு நேரடித்தொடர்பு"

பாகிஸ்தான் இராணுவ ஆதரவு டுவிட்டர் பதிவாளர்கள் போலியான இலங்கை டுவிட்டர் கணக்குகளின் மூலம் இந்தியாவுக்கு எதிரான பரப்புரைகளை மேற்கொண்டுவருகின்றனர் என்று இந்திய ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. பாகிஸ்தான் இராணுவம் மற்றும் ஐ.எஸ் ஸின் நூற்றுக்கணக்கான போலி கணக்குகளை டுவிட்டர் நிறுவனம் முடங்கியுள்ள போதிலும், புதிய தொகுதி போலி கணக்குகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரிகேடியர் என்எல்கே சமரசிங்க என்ற பெயரில், பாகிஸ்தானின் ஹுபைப், என்பவர், டுவிட்டரில் இந்தியாவை இகழ்ந்துள்ளார்.

"ஈஸ்ரர் தாக்குதலில் இந்தியா நேரடியாக தொடர்புபட்டிருந்தது. புலனாய்வு அமைப்புக்கள் ஆதாரங்களைத் திரட்டியுள்ளன.

நாங்கள் ஐ.நாவிடம் முறையிடவுள்ளோம். இந்தியா மீது மேலதிக நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கிக்றோம். இப்போது, இந்தியா எதிர்விளைவுகளுக்குத் தயாராக இருக்க வேண்டும்" என்று அதில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பதிவு, @cmd_artillery என்ற டுவிட்டர் கணக்கின் ஊடாக இடப்பட்டுள்ளது. இந்தப் பதிவு 700 மீள்பதிவுகளையும் 1237 விருப்பங்களையும் பெற்றிருக்கிறது.

இந்த டுவிட்டர் கணக்கு இலங்கை இராணுவ ஆட்டிலறிப் பிரிவின் தளபதி பிரிகேடியர் என்.எல்.கே. சமரசிங்கவின் அதிகாரபூர்வ கணக்கு என்று கூறப்பட்டுள்ளது.

இந்த டுவிட்டர் கணக்கு சரிபார்க்கப்படவில்லை. இந்த கணக்குக்குப் பின்னாலுள்ள உண்மையான அடையாளத்தை டுவிட்டர் உறுதிப்படுத்தவில்லை. 2019 பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த கணக்கில் இருந்து, 2019 ஏப்ரல் 29 ஆம் திகதியே முதல் பதிவு இடப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கு முன்னதாக, **Hubaib (@Lewany_yam)** என்ற பெயரில் இயக்கப்பட்டது என்று அறியப்படுகிறது. ஒவ்வொரு டுவிட்டர் கணக்கிலும் தனித்துவ அடையாள இலக்கம் உள்ளது, இதனை **Gettwitterid.com** இல்காணலாம். இந்த நிலையில், **@cmd_artillery** என்ற கணக்கின் தனித்துவ அடையாள இலக்கம், 110105596787 2069633 ஆகும்.

இந்த கணக்கின் பழைய டுவிட்டர் பதிவுகளைத் தேடும் போது, அது **Hubaib (@ lewany_yam)** என்ற பெயரால்பதிவு செய்யப்பட்டது என்று தெரியவந்தது.

**@cmd_artillery** என்ற கணக்கைப் பின் தொடர்பவர்கள் மற்றும் பின்பற்றுபவர்கள் பெரும்பான்மை பாகிஸ்தானியர்களாவர்என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

இதேபோன்ற கணக்கு **HUBAIB YOUSEFZAI (@da_watan_lewany)** என்ற பெயரிலும், உள்ளது. இந்தக் கணக்கின் பெயரில் **HUBAIB** என்றும், பயனர்பெயர் **lewany** என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும் இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கை மோசமான பயங்கரவாதத் தாக்குதலில் சிக்கியிருக்கும் நிலையில் பாகிஸ்தான் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முனைவதாக அந்த இந்திய ஊடகம் குற்றம்சாட்டியுள்ளது. (இ-7)

---

## கிறைஸ்ற்சேர்ச் தாக்குதலுக்கு முன்னரே இலங்கையில் தற்கொலைத் தாக்குதல்

### நியூசிலாந்து துணை பிரதமர் தெரிவிப்பு

(வெலிங்டன்)

இலங்கையில் நடந்த தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் முன்கூட்டியே திட்டமிடப்பட்டது என நியூசிலாந்து துணைப் பிரதமர் வின்ஸ்டன் பீற்றர்ஸ் தெரிவித்துள்ளார்.

கிறைஸ்ற்சேர்ச் பயங்கரவாதத் தாக்குதலுக்கு முன்னரே இலங்கையில் குண்டுவெடிப்பு சம்பவங்களை நிகழ்த்தத் திட்டமிடப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

கிறைஸ்ற்சேர்ச்சிலுள்ள இரு பள்ளிவாசல்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் 40 இற்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டனர்.

இதற்குப் பழிவாங்கும் நோக்கில் இலங்கையிலுள்ள தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்திருந்தார்.

எனினும் இதனை மறுத்திருந்த நியூசிலாந்து பிரதமர் இலங்கை தாக்குதலுக்கும் நியூசிலாந்து தாக்குதலுக்கும் தொடர்பில்லை என அறிவித்திருந்தார்.

இந்நிலையில் நியூசிலாந்தின் துணைப் பிரதமரும் அந்தக் கூற்றினை மறுத்து நேற்று முன்தினம் கருத்து வெளியிட்டுள்ளார்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் நியூசிலாந்தை இலங்கை தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

அத்தோடு இவ்வாறான சம்பவங்கள் தொடர்பான ஆதாரங்கள் ஒன்றும் இல்லாமல் அடிப்படையற்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிறைஸ்ற்சேர்ச் பயங்கரவாதத் தாக்குதலுக்கு முன்னரே இலங்கையில் குண்டுவெடிப்புச் சம்பவங்களை நிகழ்த்தத் திட்டமிட்டிருந்ததாக நிபுணர்கள் தெரிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

---

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தவின் வீட்டுக்கருகில் நடமாடியவர் கைது

(தங்காலை)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் தங்காலை - கால்டன் இல்லத்துக்கு அருகில் நடமாடிய நபரொருவர், நேற்று முன்தினம் தங்காலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெல்லம்பிட்டியைச் சேர்ந்த குறித்த நபர், வீட்டாருடன் ஏற்பட்ட முரண்பாட்டினால் கொழும்பிலிருந்து தங்காலை பேருந்தில் ஏறி தங்காலைக்குச் சென்றதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

இதேவேளை 51 வயதுடைய குறித்த சந்தேகநபர் முஸ்லிம் எனவும், இவரிடமிருந்து 2 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் பணத்தையும் மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

236


சேர். பொன். இராமநாதன்

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

மூன்று நாட்களாக முஸ்லிம் மக்கள் பல இடங்களில், காடுகளில் ஒளிந்திருந்து சிங்கள மக்கள் அவர்களின் குருதிக்காக தாகம் எடுத்த நிலையில் முஸ்லிம் இனம் வேதனையை அனுபவித்தது.

முஸ்லிம் தற்பாதுகாப்பாளர்களின் தியாகத்தினாலும் தோட்டத்துறையினர், அரச அதிகாரிகள் ஆகியோரின் உடனடித் தலையீட்டினாலும் பல இடங்களிலும் பரந்திருந்த பள்ளிவாசல்களில் பெரும்பான்மையானவற்றை காப்பாற்றப் பட்டன.

பெரும் எண்ணிக்கையிலான வர்த்தக நிலையங்களும் கடைகளும்கொள்ளையிடப்பட்டன. கொலைகள், தீ வைத்தல், பாலியல் பலாத்காரம் என்பன எண்ணிக்கையில் அடங்கா.

இருப்பினும் இலங்கையில் முதல் தடவையாகப் பிரயோகிக்கப்பட்ட மாஷல் சட்டத்தினால் இக்கலவரங்கள் அரசாங்கத்தினால் அடக்கப்பட்டன.

மாஷல் சட்டம் ஏழு சிங்கள மாகாணங்களிலுமே பிரயோகிக்கப்பட்டதன்றி பாதிப்படையாத தமிழர் பிரதேசங்ளான வடக்கு- கிழக்கு . மாகாணங்களில் அச்சட்டம் அமுல்படுத்தப்படவில்லை என தேசாதிபதி அரச செயலாளருக்கு 14 ஜூலை 1915 இல் எழுதிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இனக்கலவரங்களுக்கு சமய மோதல்கள், வியாபார வர்த்தகப் போட்டி உட்பட பல்வேறு காரணங்கள் இருந்தன. இவ்வகையான செயற்பாடுகள் எவருக்கும் எதிராக நடக்கலாம் என்பதனை குடியேற்ற அரசாங்கத்திற்குக் காட்டி எச்சரிக்கை செய்வதற்காக சிங்களவர் இவற்றைச் செய்தனர் என்று கூற சிலர் வாதிட்டனர்.

இருந்தபோதிலும் இந்தக் கலவரங்களுக்கான காரணங்களை ஆராய்வது இங்கு அதிகம் முக்கியமல்ல. ஆனால் இக்கலவரங்களினால் ஏற்பட்ட விளைவுகளை ஆராய்வது அவசியம்.

முதலாவதாக சிங்கள இனத்தின் பகைமை அல்லது சிங்களத் தேசியவாதம் குறிப்பிடக் கூடிய அளவுக்கு வலிமை பெற்றுவிட்டதை உணர்த்தும் முகமாக ஒரு தமிழ் பேசும் சமூகத்தினுள் சிறுபான்மையாக இருந்த ஒரு சமூகத்திற்கு எதிராக சிங்களவர் இவற்றை ஆரம்பித்தனர்.

இந்த நிகழ்வுகள் நிச்சயமாக இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகத்தை மட்டுமல்லாது தமிழ்ச் சமூகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தின.

மேலும் பொ. இராமநாதன் சிங்கள சமூகத்தை ஆதரித்து அதையிட்டு சட்ட நிருபண சபையில் பேசியதுடன் இங்கிலாந்திற்கே சென்று அங்கு மன்னரிடம் சிங்கள மக்கள் மாஷல் சட்டத்தினாலும் முஸ்லிம்களுக்கு நட்ட ஈடு வழங்கும்படி அத்தியட்சகர்களால் வற்புறுத்தப்படுவதனாலும் பெருமளவு துன்புறுகின்றனர் என்பதை வாதிட்டு உரைத்தார்.

இதன் விளைவாக பாதிக்கப்பட்டிருந்த முஸ்லிம் மக்கள், தமது தமிழ்ச் சகோதரர் தமது துயரமான நிலையில் தம்மைக் கைவிட்டு விட்டதாக உணர்ந்திருக்கக்கூடும். இராமநாதன் ஏற்படுத்திய இந்தக் கறை, முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒரு வேளை மறுக்கப்படாதிருக்கக் கூடும்.

ஏனெனில் இதன்பின்னர் தமிழர்களை சந்தேகத்துடன் பார்க்கும் போக்கு காணப்பட்டது. இதன்பின் தமிழர், தாமும் ஒருநாள் முஸ்லிம் மக்களைப் போன்றே சிங்களவருக்கு இலக்காகலாம் என உணர்ந்து சிங்களச் சமூகத்திற்குப் பயப்பட ஆரம்பித்ததே இக்கலவரங்களினால் ஏற்பட்ட மிகப்பெரிய பாதிப்பாகவும் இருந்திருக்கக் கூடும்.

இக்கலவரங்கள் பல்லினச் சமூகங்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி அவர்கள் மத்தியிலான இனத்துவ, சமூக உணர்வுகளை தடம்புரளச் செய்தன என்பதை எம்மால் பார்க்கக்கூடியதாக உள்ளது. ஈற்றில் இதனால் தமிழர் தமது அரசியல் எதிர்காலத்தைத் தாமே தீர்மானிப்பதற்குத் தள்ளப்படும் நிலைமைக்கு ஆளாகியிருந்தனர்.

மேற்கூறப்பட்ட விடயங்களின் அடிப்படையில் சில முக்கியமான விடயங்களை நாம் அவதானிக்க முடியும். முதலாவதாக மேற்படி அரசியல் சீர்திருத்தத்தின்படி சட்ட நிருபண சபையில் சிங்களப் பிரதிநிதிகளும் தமிழ்ப் பிரதிநிதிகளும் சம எண்ணிக்கையிலேயே இடம்பெற்றிருந்தனர்.

சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக இருந்தும் இன அடிப்படையிலோ இன விகிதாசார அடிப்படையிலோ பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

மேலும் கிழக்குப் பிரதேச மக்களும் இலங்கை அரசியலில் பங்குபற்ற வாய்ப்பளிக்கும் வகையில் அவர்களுக்கு ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருந்தது.

மொத்தத்தில் மேற்படி அரசியல் சீர்திருத்தத்திற்கு இணங்கத் தமிழரும் சிங்களவரும் சம எண்ணிக்கையான பிரதிநிதிகளையே சட்ட நிருபண சபையில் கொண்டிருந்தனர்.

இலங்கையில் சிங்களவரும் தமிழரும் சம அந்தஸ்துடைய ஆரம்ப இனங்கள் (Founding races) என்பதனையே இந்த நிலை காட்டி நிற்கின்றது.

ஆனால் அடுத்து செய்யப்பட்ட 1920-1924 ஆம் ஆண்டு மனிங் சீர்திருத்தம் இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியபோது தமிழர், தாமும் இலங்கையின் ஆரம்ப இனங்களில் ஒன்று என்ற உணர்வுடன் வாழ்ந்த நிலை பிரித்தானிய ஆட்சியாளரால் மாற்றப்பட்டு சிறுபான்மை இனம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்களையும் சுற்றுலாக்களையும் இடைநிறுத்தி பாடசாலை பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை

## மாணவர்களின் பாதுகாப்புக் கூட்டத்தில் வலியுறுத்து

(சாவகச்சேரி)

பாடசாலை மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக பாடசாலைகளில் நடத்தப்பட்டுவரும் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்களில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கும் பெற்றோர்களுக்கும் வாசித்துக் காட்டப்பட்டு வருகின்றது. பாடசாலைகளில் இயங்கும் இடர் முகாமைத்துவ அலகினை மீண்டும் செயற்படுத்தி மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பான முற்காப்பு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். சகல பாடசாலைகளிலும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பாடசாலை மட்ட விழிப்புக்குழு ஒன்றை உடனடியாக அமைத்தல் வேண்டும். இந்தக் குழுவினது கூட்டங்கள் மாதாந்தம் இரு தடவை இடம்பெற்று அக்கூட்டக் குறிப்புக்கள் பாடசாலையில் பேணப்படுவதுடன் அதன் பிரதி உரிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் காலையில் பெற்றோர், ஆசிரியர்கள் கொண்ட குழுவினர் தினமும் பாடசாலை வளாகம், வகுப்பறைகள், மைதானம், சிற்றுண்டிச்சாலை, பாடசாலை நூலகம் போன்றவைகள் பரிசோதனை செய்ய வேண்டும். சந்தேகத்திற்கிடமான பொருட்கள், பொதிகள் உள்ளனவா? என்பதை பரிசோதித்து பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். பாடசாலை மாணவர்கள் வருகின்ற போது பிரதான வாயிலில் ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள் ஆகியோர் உள்வரும் மாணவர்களை தங்கள் பாடசாலை மாணவர்கள் தான் என்பதை உறுதிப்படுத்திய பின்னர் பாடசாலையில் உள்நுழைய அனுமதிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பாடசாலை வளாகத்தினுள் முன் அனுமதியின்றி, அவசிய காரணமின்றி எந்த வாகனங்களையும் உட் செல்ல அனுமதிக்கப்படக்கூடாது.

நாளாந்தம் பாடசாலை ஆரம்பித்த பின்னர் பாடசாலையின் வாயிற் கதவினை பூட்டி வைக்க வேண்டும். தெரியாத நபர்களை பாடசாலை வளாகத்தில் உள்நுழைய அனுமதிக்கக்கூடாது. அடையாளப்படுத்திய பின்னர் அதிபரிடம் தொடர்பு கொண்டு உள்நுழைய அனுமதிக்க வேண்டும். பாடசாலையின் பொது வைபவங்கள், பரிசளிப்பு விழாக்கள், விளையாட்டுப்போட்டிகள் மற்றும் சுற்றுலா நிகழ்வுகளை தற்காலிகமாக இடை நிறுத்த வேண்டும்.

பாடசாலை அதிபர்கள், பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி, இராணுவ கடற்படை தொடர்பு அலுவலர்கள் மற்றும் பொலிஸ் தொடர்பு உத்தியோகத்தர்கள் ஆகியோரின் கைத்தொலைபேசி, அலுவலக தொலைபேசி இலக்கங்களைப் பெற்று வைத்திருக்க வேண்டும்.

பாடசாலையில் கட்டட நிர்மாண வேலைகள் நடைபெறும் இடங்களில் விசேட கண்காணிப்பு இருக்க வேண்டும். மாணவர்கள் தொகை அதிகமாகவுள்ள பாடசாலைகளைச் சுற்றி சி.சி.ரிவி (cctv) காமராக்களை வலயக் கல்விப் பணிப்பாளரின் முறையான அனுமதியுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியிலிருந்து பொருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் இயங்கு நிலையில் இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்

ஆயிரம் பிள்ளைகளுக்கு மேல் கல்வி கற்கும் பாடசாலையின் அதிபர்கள் தேவை ஏற்படுமிடத்து அப்பிரதேச பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை பெற்றுக்கொள்ள வேண்டும்.

சகல பாடசாலை அதிபர்களும் தங்கள் பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களின் உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் ஆகியோரின் தொலைபேசி இலக்கங்கள், பெயர் விபரங்கள் என்பவற்றுடன் அவற்றில் வருகை தரும் மாணவர்களின் பெயர் விபரங்களையும் பெற்று தம்வசம் வைத்திருக்க வேண்டும்.

பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் சேவையின் போது மாணவர்களை மட்டும் அழைத்து வருவதனை உரிய சாரதிகள், நடத்துநர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

மாணவர்களின் காலைப் பிரார்த்தனை வகுப்பு ரீதியாக ஒழுங்குபடுத்துவதுடன் மாணவர்களுக்கான விழிப்புணர்வு அறிவுறுத்தல்களை வகுப்பாசிரியர்கள் மூலம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

சந்தேகத்திற்கு இடமான நபர்களை மற்றும் பொருட்களை கண்டால் அது பற்றி வகுப்பாசிரியர், அதிபர் மற்றும் மாணவத் தலைவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட பொலிஸ் சார்ஜன் மற்றும் அதிபர் ஆகியோர் சுற்றுநிருபத்திலுள்ள தகவல்களை தெரிவித்தனர். (5-114)

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் 4 ஆம் திகதி சனிக்கிழமை கடந்த 21 ஆம் திகதி "உயிர்த்த ஞாயிறு" தினத்தில் இலங்கையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பால் உயிரிழந்த உறவுகளுக்கான அஞ்சலி நிகழ்வும் எமது சங்கத்தால் 4 மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் இரத்ததான முகாம்களின் வரிசையில் 13 ஆவது மாபெரும் இரத்ததான முகாமும் காலை 8.30 மணி முதல் இளவாலை பிரதேச வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது. (இ-7)

# பாரவூர்தி-கப் மோதிய விபத்தில் இருவர் பலி!



(கொழும்பு)

அம்பேபுஸ்ஸ - திருகோணமலை வீதி தபலகமுவ - கல்மெடியாவ பிரதேசத்தில் கப் ரக வாகனம் ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் நேற்றுக் காலை மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கப் ரக வாகனத்தின் சாரதி மற்றும் அதில் பயணித்த மற்றும் ஒருவர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. 23 மற்றும் 27 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த பாரவூர்தியின் சாரதி திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1708

### அசோக்

எந்த அம்மாவும் என் அம்மாவைப் போல் இருக்கமுடியாது என எல்லோரையும் நினைக்க வைப்பதே அம்மாக்களின் அதிசயம்




### வருணன்

துவைத்து போட்ட துணியெல்லாம் ஒரு மணி நேரத்தில காய்ஞ்சிருது... குளிச்சிட்டு போட்ட சட்டை ஒரு மணி நேரத்தில நனைஞ்சிருது... முடியலடா...



### பிரவீனா

உங்களைக் கண்டுகொள்ள அறிவைப் பயன்படுத்துங்கள்! மற்றவர்களைக் கண்டுகொள்ள இதயத்தைப் பயன்படுத்துங்கள்



### சர்மா

அதிர்ஷ்டம் என்பது எல்லோருக்கும் அமையாது... உதவி எப்பொழுதும் அடுத்தவரிடம் உனக்கு கிடைத்துக்கொண்டே இருக்காது... கடைசியில் உன்னிடம் மிஞ்சுவது உன் மேல் நீ கொண்ட தன்னம்பிக்கை மட்டுமே! அதை மட்டும் என்றுமே இழந்து விடாதே!



### திலக்

ஒருவருடைய கண்களில் இருந்து கண்ணீர் வரும்போது இன்னொருவருடைய கண்களில் இருந்து கண்ணீர் வந்தால் அந்த உறவை விட இந்த உலகத்தில் பெரிய உறவு இல்லை...!



### சுமதி

மாமியார்: நேற்று நான் போன சினிமாவைப் பார்த்து சிரிச்சு சிரிச்சு பாதி உயிர் போயிடுச்சு
மருமகள்: அப்படியா அத்தை! அந்தப் படத்தை இன்னிக்கும் ஒரு தடவை போய் கண்டிப்பாகப் பார்த்திட்டு வாங்க



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆண்டகையின் கருத்து ஆதாரமற்றது

## திலங்க சுமதிபால நிராகரிப்பு

(கொழும்பு)

தற்போது நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ள கருத்துக்கள் அடிப்படையற்றவை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி. திலங்க சுமதிபால தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இது தொடர்பில் மேலும் தெரிவித்த சுமதிபால,



உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் சம்பவங்களின் பின்னர் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் திருப்திகரமானதாக இல்லை என்றும் அதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட ஆணைக்குழு தொடர்பில் அதிருப்தியையும் பேராயர் வெளியிட்டிருந்தார். உண்மையில் ஓய்வுபெற்ற நீதிபதி, ஓய்வு பெற்ற பொலிஸ்மா அதிபர் மற்றும் அமைச்சின் செயலாளரென சிரேஷ்ட, அனுபவமுள்ள பிரதிநிதிகளையே ஜனாதிபதி அவ்வாணைக் குழுவிற்கு நியமித்துள்ளார்.

இத்தகைய அனுபவமுடையவர்களே மேற்படி குழுவுக்கு மிகப் பொருத்தமானவர்கள். அந்த வகையிலேயே ஜனாதிபதி அவர்களை நியமித்துள்ளார்.

குண்டுவெடிப்பு இடம்பெற்ற தன் பின் முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.

நாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. குற்றவாளிகள் என சந்தேகிக்கப்படுவோரில் பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். வாகனங்கள், ஆயுதங்கள் உட்பட பயங்கரவாதிகளின் பெருமளவான பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பவங்கள் நடந்து ஒருவார காலத்துக்குள்ளேயே நாட்டில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் வகையில் ஜனாதிபதி முக்கியமான தீர்மானங்களை எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேச நாடுகள் தமது திருப்தியை வெளியிட்டுள்ளதுடன் இலங்கைக்கு உதவுவதற்குத் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளன. சிலர் வெளிநாட்டுப் படைகள் இலங்கைக்குள் வரப்போவதாக விமர்சித்து வருகின்றனர். சிறிமாவோ பண்டாரநாயக்கவின் காலத்திலும் அதன் பின்னரும் இந்தியாவிலிருந்து படை உதவிகள் பெறப்பட்டுள்ளன. வெளிநாட்டு படைகளை கொண்டுவருவதாக ஜனாதிபதி எத்தகைய தீர்மானத்தையும் தற்போது எடுக்கவில்லை. அவர் அது தொடர்பில் எதனையும் கூறவும் இல்லை.

வெளிநாடுகளின் அனுபவங்களையும் தொழில்நுட்ப ரீதியான உதவிகளையும் பெற்றுக் கொள்வதே அவரது நோக்கம்.

மேற்படி பயங்கரவாதம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றல்ல. இது சர்வதேச தொற்றுக் கிருமியாகும். இதனை ஒழிப்பதற்கு எமது புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்டோர் நடவடிக்கை எடுத்துள்ளனர். சர்வதேச பொலிஸ் துறையின் அனுபவம் மற்றும் சர்வதேச ரீதியில் அனுபவமுள்ளவர்களின் யோசனைகளும் பெறப்படும். எமது பொலிஸார், மற்றும் முப்படையினரின் மீது நம்பிக்கை வைத்தே ஜனாதிபதி செயற்படுகின்றார் என்றும் திலங்க சுமதிபால மேலும் தெரிவித்தார். (இ-7)

# காத்தான்குடி காரியாலயத்தில் மீட்கப்பட்டவை உத்தியோகபூர்வ துப்பாக்கி ரவைகளே!

## கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லா விளக்கம்



(ஏறாவூர்)

தனது அலுவலகத்தில் மீட்கப்பட்ட துப்பாக்கி ரவைகளுக்கும் தனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

ஹிஸ்புல்லாவின் மட்டக்களப்பு காத்தான்குடியிலுள்ள காரியாலயத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் மேற்கொண்ட சோதனையின்போது ரி.56 ரக துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந் நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் எனது காத்தான்குடி காரியாலயம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட போது, எனது பாதுகாப்புக்கு பொறுப்பான பொலிஸாரும், அமைச்சர்களுக்கான பாதுகாப்பு பிரிவினரும் காத்தான்குடி பொலிஸாரும், எனது காரியாலயத்தில் பின்னால் தங்கியிருந்த அறையிலிருந்து உத்தியோகபூர்வமாக காத்தான்குடி பொலிஸாரால் வழங்கப்பட்டு பாதுகாப்பிற்கு பயன்படுத்துகின்ற சுமார் 40 துப்பாக்கி ரவைகளை மீட்டுள்ளனர்.

இது உத்தியோகபூர்வமாக பாதுகாப்பிற்காக பொலிஸாருக்கு வழங்கப்பட்டது. இது தொடர்பாக தற்போது பாதுகாப்புக்கு பொறுப்பானவர்கள் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும் வரை காரியாலயத்திற்கு பொறுப்பான 2 சகோதரர்களையும் காத்தான்குடி பொலிஸில் தடுத்து வைத்துள்ளார்களே தவிர இந்த துப்பாக்கி ரவைகளுக்கும் எங்களுக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது.

இது உத்தியோகபூர்வமாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு சொந்தமான துப்பாக்கி ரவைகள் என்பதை மிகத் தெளிவாக குறிப்பிடுகின்றேன் என்றும் ஆளுநர் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார். (இ-7)

# செய்தித்துளிகள்

## இரு வெளிநாட்டவர்கள் கைது

(ராஜகிரிய)

வெலிகட ராஜகிரிய பிரதேசத்தில் விசா இன்றி உள்நாட்டில் தங்கியிருந்த இரு வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவைச் சேர்ந்த 28 மற்றும் 32 வயதுடைய வெளிநாட்டவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெலிகட பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது நேற்று முன்தினம் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## குண்டுத் தாக்குதல்களுக்கு எதிரான கண்டனத் தீர்மானம் நிறைவேற்றம்

(கொழும்பு)

முழு நாட்டையும் சோகத்தில் ஆழ்த்திய 2019 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் தேவாலயங்கள் மற்றும் மூன்று நட்சத்திர ஹோட்டல்களில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலினால் மரணமடைந்த மற்றும் காயமடைந்த மக்களுக்கு கொழும்பு மாநகரசபை முதல்வர் ரோஸி சேனநாயக்க அம்மையாரின் முன்மொழிவான அனுதாப பிரேரணையும் ஜனநாயக மக்கள் முன்னனி உபதலைவரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான பாஸ்கராவின் கண்டன தீர்மானமும் சபையில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (இ-7)

## போதைப்பொருள் கடத்தல் மதூஷின் மனு மீதான வழக்கின் தீர்ப்பு இன்று

(டுபாய்)



போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் டுபாயில் கைது செய்யப்பட்டுள்ள மாகந்துரே மதூஷ் அந்நாட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு மீதான தீர்ப்பு இன்று அறிவிக்கப்படவுள்ளது.

தன்னை இலங்கைக்கு நாடு கடத்த வேண்டாம் எனத் தெரி வித்து மாகந்துரே மதூஷ் டுபாய் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய் திருந்தார். இது தொடர்பில் விசாரணை செய்த அந்நாட்டு நீதிமன்றம் மனு தொடர்பான தீர்ப்பை இன்று 02 ஆம் திகதி அறிவிப்பதாக தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கூட்டுறவுச் சங்கத்தில் மதிய உணவு 80 ரூபா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் 01.05. 2019 புதன்கிழமை தொடக்கம் மர க்கறியுடனான மதிய உணவு 80 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வுள்ளது என அறிவித்துள்ளனர்.

எல்லா வகையான சிற்றுண் டிகளும் பத்து ரூபாவுக்கு விற் பனை செய்யப்படுகிறது. காலை, மாலை உணவுகளான பிட்டு, இடியப்பம், தோசை,இட்லி போன் றவையும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

மதிய உணவு கூட்டுறவு சிற் றுண்டி நிலையத்தில் 80 ரூபா வுக்கு விற்பனை செய்யப்படுவது சாவகச்சேரி நகரப் பகுதியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. (இ-114)

# கொழும்பு துறைமுக நகரத்தை அரச இடமாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்புத் துறைமுக நகரத்தை கொழும்பு மாவட் டத்திலும் மேல் மாகா ணத் திலும் உள்ள அரசாங்க இடமாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய பொருளாதார வளர்சசியை துரிதப்படுத்துவதற்காக உயர்வான பெறுமதியைக்கொண்டதும் வெளி நாட்டு முதலீட்டைகவரு வதற்குமாக மணலை பயன்படுத்தி கடலை நிரப்பியதன் மூலம் துறைமுக நகரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 269 ஹெக்டெயர் நிலப்பரப்பு இல ங்கையின் நிலப்பரப்புடன் ஒன்றிணைக்கப்பட்டுள் ளது.

அதன் பாதை பொது நிறுவனங்களைக்கொண்ட 91 கிலோமீற்றர் நீளத்தி னாலான இரண்டு கரை யோரம் முக்கிய பூங்காவொன்றும் வருடத்தின் எந்தக் காலப்பகுதியிலும் நீச்சல் மற்றும் நீர் விளை யாட்டுக்கான கடலோரம் மற்றும் நகரத்தின் ஊடாக 70 மீற்றர் அகலத்தைக் கொண்ட கால்வாயொன்று அமைக்கப்படும்.

இதேபோன்று உணவ கங்கள் மற்றும் பொழுது போக்கு வசதிகளைக் கொண்ட ஓய்வு நிலையம், களியாட் டப் பூங்கா, சர்வதேச கல்வி சர்வதேச சுகாதார சேவை மற்றும் மகாநாட்டு மண்டபம் முதலானவற்றை இந்த பிரதேசம் கொண்டுள்ளது.

எதிர்காலத்தின் தேசிய பொருளாதாரத்திற்கு உன்னதமான பங்களிப்பை வழங்கவுள்ள கொழும்புத் துறை முக நகரம் கொழும்பு மாவட் டத்திலும் மேல் மாகாணத்திலும் உள்ள அரசாங்க இடமாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்தல் உள் ளிட்ட பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காக இந்தப் பிரதேசத்தை முகா மைத்துவம் செய்தல் மற் றும் முன்னெடுப்பதற்காக தேவையான அதிகாரத்தைக் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ முறை ஒன்றை அமைப்பதற்கு மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்திசாலி வியாபாரி



ஆனந்தபுரி என்ற கிராமத்தில் ஆண்டியப்பன் என்ற ஏழை விவசாயி வாழ்ந்தான். அவனுக்கு மனைவியும் மூன்று பெண் குழந்தைகளும் இருந்தனர். மூத்த பெண் திருமண வயதை எட்டி நின்றாள். ஆண்டியப்பன் கடும் உழைப்பாளி. ஆனால், கடுமையாக உழைத்தும் அவன் வீட்டில் வறுமை தலைவிரித்து ஆடியது. அன்றும் வழக்கம்போல் வயலில் இருந்து வீடு திரும்பினான் ஆண்டியப்பன். சோகமாகத் தூணில் சாய்ந்தபடி ஆழ்ந்த யோசனையில் இருந்தான்.

"ஏனுங்க, உங்களைத்தானே கேட்கிறேன். என்ன ஆச்சு உங்களுக்கு?" என்று கேட்டாள் அவள் மனைவி ராசாத்தி. "மூத்தவள் திருமண வயதைத் தாண்டி விட்டாள். அவளுக்கு மணம் முடித்து வைக்கணுமே. அதுக்குப் பணம் வேண்டுமே... நான் எங்கே போவது பணத்துக்கு? அதை நினைக்கிறப்ப தூக்கமே வரமாட்டேங்குதடி" என்றான். "இதுக்குப் போய் இப்படி இடிஞ்சு போனா எப்படி? எங்கிட்ட கொஞ்சம் பணம் இருக்கு. ரொம்பக் காலம் சேமித்து வைச்சது" என்றாள் அவள்.

சற்று நேரத்தில் சிறிய பானை ஒன்றுடன் திரும்பி வந்தாள். பானையில் இருந்த பணத்தை கணவன் முன் தரையில் கொட்டினாள். காலையில் உற்சாகத்துடன் எழுந்து ஆண்டியப்பன் மனைவியிடம் விடைபெற்றுக் கொண்டு வயலுக்குப் புறப்பட்டான். வழக்கத்தை விட உற்சாகமாக வேலை செய்யும் ஆண்டியப்பனை வியப்புடன் பார்த்தனர் உடன் வேலை செய்பவர். மதிய உணவுக்குப் பிறகு அனைவரும் வயல் ஓரம் மரத்தடியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். "அண்ணே, நேற்று ராத்திரி பக்கத்துக் கிராமத்திலே கொள்ளைக்காரங்க புகுந்து கொள்ளை அடிச்சிட்டாங்க" அதைக் கேட்டு அனைவரும் திடுக்கிட்டனர்.

ஆண்டியப்பன் சற்றுக் கூடுதலாகவே திடுக்கிட்டான். "அய்யய்யோ! மகள் திருமணத்துக்கு வைத்திருக்கும் பணத்தை படுபாவிங்க கொள்ளையடிச்சா என்ன செய்வேன்" என்று தனக்குள் பதற்றத்துடன் கூறினான் ஆண்டியப்பன். மாலையில் வீடு திரும்பிய ஆண்டியப்பன் கவலையுடன் இருப்பதைக் கண்டு மனைவி திடுக்கிட்டாள். "ஏனுங்க, என்னாங்க ஆச்சு. ஏனிப்படி பேயறைஞ்சாப்ல இருக்கீங்க?" என்று கேட்டாள் ராசாத்தி. "அடியே நேற்றைக்கு பக்கத்துக் கிராமத்தில கொள்ளைக்காரங்க புகுந்து ஏகப்பட்ட பொருட்களை கொள்ளை அடிச்சாங்களாம்!" என்றான். மனைவி பயத்தால் வாய் பொத்தி நின்று தேம்பி அழுதாள்.

சற்று நேரத்தில் கதவு தட்டும் சத்தம் கேட்டது. இருவரும் பயந்து நடுங்கினர். மீண்டும் கதவு தட்டும் சத்தம் கேட்டது. அவன் எதுவும் பேசவில்லை. மீண்டும் மீண்டும் கதவு தட்டப்பட்டது. "என்னாங்க உள்ளே யாரும் இல்லையா?" என்றது ஒரு குரல். மீண்டும் மீண்டும் அதே கேள்வி எழுந்தது. வருவது வரட்டும் என்று, "யாருங்க அது?" என்று நடுக்கத்துடன் கேட்டான் ஆண்டியப்பன். "நான் ஒரு வியாபாரி. இந்தப் பக்கம் வந்த போது இரவு ஆயிடுச்சு. அதனால இரவு இங்கே தங்கிவிடலாம்னு தான் வந்திருக்கிறேன்" என்றது அந்த குரல். சற்று நேரத்தில் கதவு திறந்து. உடல் நடுங்கியபடி வெளியே எட்டிப் பார்த்தான் ஆண்டியப்பன்.

"நீங்க ஏங்க இப்படி பயப்படுறீங்க?" என்று கேட்டான் வியாபாரி. "ஒண்ணுமில்ல ஒண்ணுமில்ல" என்றான் ஆண்டியப்பன். இருவருக்கும் உணவு வழங்கினாள் ராசாத்தி. இருவரும் ஊர்க்கதை பேசிக் கொண்டே உணவு சாப்பிட்டனர். "நீங்கள் பயப்படுறாப்ல இருக்கே... என்ன காரணம்?" என்றான் வியாபாரி.

இனிமேல் இவரிடம் எதையும் மறைக்கத் தேவையில்லை என்று முடிவு செய்த ஆண்டியப்பன், "ஐயா, ஊரெல்லாம் ஒரே திருட்டுப் பயம். பக்கத்துக் கிராமத்தைக் கூட கொள்ளையர்கள் கொள்ளை அடிச்சிட்டாங்க. என் மகளோட கல்யாணத்துக்காக கொஞ்சம் பணம் வைத்திருக்கிறேன். அதை கொள்ளைக்காரங்க கொள்ளை அடிச்சுக்கிட்டு போயிடுவாங்களோன்னு பயமாயிருக்குங்க" என்றான். அதைக் கேட்ட வியாபாரியும் பயந்து நடுங்கினான். "அப்படியா! அய்யய்யோ! அவனுங்க இங்கே வந்துட்டா என்ன பண்றது? ஆமா, நீங்க எவ்வளவு பணம் வைத்து இருக்கிறீர்கள்?" என்றான் வியாபாரி.

"ஆயிரம் பணம்" என்றான் ஆண்டியப்பன். வியாபாரி சற்று நேரம் யோசித்த பிறகு: "நான் ஒரு யோசனை சொல்கிறேன்" என்றான் வியாபாரி. "சீக்கிரம் சொல்லுங்க" என்று ஆவலுடன் கேட்டான் ஆண்டியப்பன். "முற்றத்தில் ஒரு குழி தோண்டி பணத்தை அதில் புதைத்து விடுவோம். பிறகு கொள்ளைக்காரர்களால் கண்டுபிடிக்க முடியாது" என்றான் வியாபாரி. "நல்ல யோசனை, அப்படியே அந்தப் பணத்தை எடுத்துக்கிட்டு வா" என்று மனைவியை பார்த்துக் கூறினான் ஆண்டியப்பன். பணப் பானையுடன் வந்தாள் ராசாத்தி.

ஆண்டியப்பன் வீட்டு முற்றத்தில் ஒரு குழி தோண்டி பானையை அதற்குள் வைத்து மண் போட்டு மூடினான். ஆண்டியப்பனுக்கு கொஞ்சம் ஆறுதல் ஏற்பட்டது. ராசாத்தியும் மகிழ்ச்சி அடைந்தாள். அனைவரும் உறங்கினர். சற்று நேரத்தில் குதிரைகள் பாய்ந்து வரும் ஓசை அவர்களை நடுங்க வைத்தது.

குதிரைகள் வீட்டு முற்றத்திற்குள் புகுந்தன. வியாபாரியும் ஆண்டியப்பனும் மனைவியும் குழந்தைகளும் பயந்து நடுங்கினர். குதிரை மீது அமர்ந்து இருந்த கொள்ளையர்கள் பலமாக கதவைத்தட்டினர். உள்ளிருந்த யாரும் பேசவில்லை. ஆத்திரம் கொண்ட கொள்ளையர்கள் கதவை உதைத்து உடைத்தனர். "வெளியே வாங்கடா கழுதைகளே..." கொள்ளைத் தலைவன் கத்தினான். அவர்கள் கைகளில் வாள்கள் மின்னுவதை கண்டு அனைவரும் நடுங்கினர்.

கொள்ளைத் தலைவன் ஒவ்வொருவராக வெளியே இழுத்துப் போட்டான், "எடுடா பணத்தை" என்று அலறினான். "எங்கிட்ட என்று அழுது கொண்டே சொன்னான் ஆண்டியப்பன், கொள்ளையன் தன்னிடம் இருந்த சவுக்கால் ஆண்டியப்பனை ஓங்கி அடித்தான். "உம்... சொல்லுடா எங்க வச்சிருக்கே பணத்தை?" அடிபட்ட ஆண்டியப்பன் கொள்ளையனின் கால்களை பற்றி அழுதான். அதைக் கண்டு ஆத்திரம் அடைந்த அவன் தன் கால்களால் ஆண்டியப்பனை உதைத்தான். அப்போது வியாபாரி முன் வந்து. "அடிக்காதீங்க, நான் சொல்றேன்" என்றான். கொள்ளையன் வியாபாரியை முறைத்துப் பார்த்தான். "இந்த முற்றத்தில் குழி தோண்டி புதைத்து இருக்கிறான்" என்றான் வியாபாரி. ஆண்டியப்பனும், மனைவியும் பரிதாபத்துடன் வியாபாரியை பார்த்தனர். கொள்ளையர்கள் குழிக்குள் மறைத்து வைத்திருந்த பானையை தோண்டி எடுத்தனர்.

பிறகு பணத்துடன் அங்கிருந்து பாய்ந்து சென்றனர். இந்த வியாபாரியும் கொள்ளையர்களின் ஆள் என்று முடிவு செய்தான் ஆண்டியப்பன். "இவன் பேச்சைக் கேட்டு ஏமாந்து விட்டேனே. மகள் திருமணத்திற்கு வைத்திருந்த பணத்தை பறி கொடுத்து விட்டேனே" என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதான் ஆண்டியப்பன். ஆண்டியப்பன் வியாபாரி முன் நின்று அழுதபடி கத்தினான். "அடப் பாவி, உம் பேச்சைக் கேட்டு பணத்தை பறி கொடுத்துட்டேனே...நீ நல்லா இருப்பியா?" என ஆண்டியப்பன் போட்ட கூச்சல் கிராமத்தை உலுக்கியது. மக்கள் அனைவரும் ஆண்டியப்பன் வீட்டுக்கு விரைந்தனர்.

கிராம மக்களை கண்ட ஆண்டியப்பன் நடந்ததை சொன்னான். "ஏம்பா, உனக்கு இரவில் உணவு தந்து, தங்க இடம் தந்த ஒருவரை இப்படியா காட்டிக் கொடுப்பது?" என்று ஒருவர் ஆத்திரத்துடன் கேட்டார். மக்கள் அனைவரும் வியாபாரி மீது கடும் கோபத்தில் இருந்தனர். கொள்ளையர்கள் மீது இருந்த கோபத்தை வியாபாரி மீது காட்டுவதற்காக மக்கள் துடித்தனர். இன்னும் சிறிது நேரத்தில் கிராம மக்கள் தன் மீது பாய்ந்து தாக்கிவிடக் கூடும் என்று உணர்ந்த வியாபாரி, "ஐயா, நான் சொல்றதை கேட்டு விட்டு தீர்ப்பு கூறுங்கள்" என்றான்.

அனைவரும் அவனை உற்றுப் பார்த்தனர். அவன் தன்னிடம் இருந்த கோணிப் பையை அவிழ்த்தான். அதற்குள் ஏகப்பட்ட பணம்! "இதற்குள் பத்தாயிரம் பணம் உண்டு. கொள்ளையர்கள் கேவலம் ஆயிரம் பணம் தான் எடுத்துச் சென்றனர். அந்த ஆயிரத்தை காட்டிக் கொடுத்து பத்தாயிரத்தை பாதுகாத்தேன்" என்றான் வியாபாரி. அதைக் கேட்ட ஆண்டியப்பன், "ஐயா, உன் பணத்தை காப்பாத்திட்டீங்க... ஆனா என் மகள் கல்யாணத்துக்கு வச்சிருந்த பணம் போயிடுச்சே" என்று அழுதான். "ஐயா, நான் நன்றி கெட்டவன் அல்ல. என் பத்தாயிரத்தை காப்பாற்றிய உங்களை நான் காப்பாற்ற மாட்டேனா" என்று கூறியபடி ஆயிரத்து ஐந்நூறு பணத்தை ஆண்டியப்பனிடம் கொடுத்தான் வியாபாரி. அங்கு கூடியிருந்தவர்கள் வியாபாரியின் புத்திசாலித்தனத்தை பாராட்டினர்.

குட்டீஸ்களே... எதிர்பாராமல் நடைபெறும் ஆபத்தை புத்திசாலித்தனமாக சமாளிக்கலாம். அப்படி புத்தியால் எந்த ஆபத்தையும் வெல்ல முடியும் என்பதை பார்த்தீர்களா? எனவே, நீங்களும் புத்திசாலித்தனமாக இருங்கள்.

## பொது அறிவு துணுக்குகள்

- தந்தி அனுப்புவதற்கான சங்கேதக்குறியை, 1837 ஆம் ஆண்டு சாமுவேல் மோர்ஸ் என்ற அமெரிக்க அறிஞர் கண்டுபிடித்தார்.
- குழந்தை பிறந்த 15 நாட்களுக்குப் பிறகே கண்ணீர்ச் சுரப்பி வளர்கிறது.
- நெருப்புக்கோழி மணிக்கு சுமார் 80 கிலோமீற்றர் வேகத்தில் ஓடும்.
- பைசா நகர சாய்ந்த கோபுரத்தில் 294 படிக்கட்டுகள் உள்ளன.
- அன்னாசிப் பழத்தில் விதை கிடையாது.

## இனிய மொழிகள்

இனிய மொழிகள் பேசி நீங்கள்
இன்பம் எய்த வேண்டும்
கனியைத் தின்று மகிழும் இன்பம்
கண்டு வாழ் வேண்டும்

எல்லோருக்கும் இன்பம் ஈதல்
இனிய மொழியால் ஆகும்
நல்ல அன்பும் நட்பும் புகழும்
நன்மை வந்து சேரும்

அல்லல் அகலும் செல்வம் குவியும்
அருளும் சுரந்து பாயும்
நல்ல இனிய மொழிகள் கூறி
நாங்கள் சேர்ந்து வாழ்வோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால் அது உனக்கு கற்பித்த பாடத்தை மறந்து விடாதே! ~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஏக்கத்தோடு வாழுதல்தான் எங்கள் தலைவிதியோ!

றம்ழான் பண்டிகைக்கு முன்பாக மீண்டும் பாரிய தாக்குதல்கள் இடம்பெறும் சாத்தியம் இருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டப்லிஸ் எச்சரித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவரின் எச்சரிக்கையை எவரும் சாதாரண விடயமாகக் கருதி விடக்கூடாது.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து இலங்கை முழுவதையும் பதற்றமும் பயங்கரமும் பீடித்துள்ளது.

எந்த நேரம் எது நடக்குமோ என்ற ஏக்கத்தின் மத்தியில் மீண்டும் பாரிய தாக்குதல்கள் இடம்பெறலாமென அமெரிக்கத் தூதுவர் எச்சரிக்கைப்படுத்தியுள்ளமை இனி எங்கள் வாழ்வு ஏக்கம் நிறைந்ததாகவே இருக்கப் போகிறதா? என்ற வினாவை முன்னிறுத்தியுள்ளது.

அதிலும் எதிர்வரும் ஆறாம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகின்ற நிலையில், பள்ளிக்குச் சென்ற பிள்ளைகள் வீடு வந்து சேரும் வரையில் ஒவ்வொரு பெற்றோரும் உறவுகளும் ஏங்கி ஏங்கி வாழுதல் தவிர்க்க முடியாததாகிறது.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் ஏப்ரல் மாதத்தின் இறுதி நாட்களில் தாக்குதல்கள் இடம்பெறலாம் என அமெரிக்கா தெரிவித்திருந்தது.

இதன்காரணமாக படையினரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரமடைந்திருந்ததுடன் பொது மக்களும் வீட்டை விட்டு வெளியே செல்வதைத் தவிர்த்திருந்தனர்.

இந்நிலையில் மே மாதம் ஆரம்பமாகியபோது, ரம்ழான் பண்டிகைக்கு முன்பாக மீண்டும் பாரிய தாக்குதல் இடம்பெறலாம் என அமெரிக்கா எச்சரித்திருப்பது இலங்கை மக்களுக்கு இனி நிம்மதி இல்லை என்பதாக நிலைமையை மாற்றியுள்ளது.

எதுஎவ்வாறாயினும் குண்டுத்தாக்குதல்கள் எப்போதும் இடம்பெறலாம் என்ற பதற்றமான சூழ்நிலையானது சுமுகமான வாழ்க்கையைக் கடுமையாகப் பாதிக்கவே செய்யும்.

எனவே பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்ற விடயத்தில் கடுமையாகக் கவனம் செலுத்துவது அவசியமாகிறது.

அதேநேரம் எதிர்வரும் 6ஆம் திகதி பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இங்குதான் பாடசாலைகளுக்கான விசேட பாதுகாப்புகள் தேவைப்படும். அதேநேரம் பாடசாலைகள் ஆரம்பிக்கின்றபோது போக்குவரத்துச் சேவைக்கான பாதுகாப்புப் பற்றியும் சிந்திப்பது அவசியம்.

தேவை ஏற்படின் தரம் ஒன்று மற்றும் தரம் இரண்டு மாணவர்களுக்கான பாடசாலை ஆரம்பத்தை ஓரிரண்டு வாரங்கள் பிற்போடுவதுகூட பொருத்தமானதாக இருக்கும்.

இதுபற்றியெல்லாம் உடனுக்குடன் தீர்மானம் எடுக்கக்கூடிய தற்துணிவில் அதிகாரிகள் இருப்பதும் பாடசாலை சமூகம், கல்வித் திணைக்களம், பொலிஸ் தரப்பு, தீயணைப்புப் பிரிவு, மருத்துவ சேவை என்பவற்றுக் கிடையில் அதிவேகமான தொடர்பாடல் சேவை மிகச்சிறப்பான இயங்கு நிலையில் இருப்பதும் அவசியமாகும்.

# வடக்கு பாடசாலைகள் திட்டமிட்டவாறு எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகும்

## பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"வடக்கு மாகாணப் பாடசாலைகள் திட்டமிட்டவாறு எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும். பாடசாலைகளின் பாதுகாப்புத் தொடர்பில் சமூகமட்டக் குழுக்கள் மற்றும் பொலிஸ் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பாதுகாப்புத் தேவை எனக் கோரினால் அதனை வழங்கத் தாயார்"

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாணத்தில் 339 தனியார் கல்வி நிலையங்கள் காணப்படுகின்றன.

இதில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நகரபகுதியில் உள்ள 84 தனியார் கல்வி நிலையங்கள் உள்ளன. ஏனைய பகுதியில் 290 தனியார் கல்வி நிலையங்கள் இருக்கின்றன.

இதில் எந்தவொரு கல்வி நிலையத்தின் இயக்குநரும் பதிவு செய்ய முன்வரவில்லை. அவர்கள் முன்வர வேண்டும். அப்போதுதான் அவ்வாறான கல்வி நிலையங்களுக்குப் பாதுகாப்பினை வழங்கமுடியும். பொலிஸார், அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் ஊடாக கல்வி நிலையத்திற்காக பாதுகாப்பினை கொடுக்க முடியும். அதுவும் காலத்தின் தேவையாக இருக்கின்றது.

வட மாகாணத்தில் எதிர்வரும் 06ஆம் திகதி அனைத்து பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

பாடசாலைச் சமூகம் இராணுவமயமற்ற பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியதால், பாடசாலையைச் சேர்ந்த பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் சாரணர்களை உள்ளடக்கிய சிவில் விழிப்புக் குழுக்கள் விழிப்புடன் செயற்படும் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக எந்தவொரு ஆசிரியரும் தமக்கு மேலதிக பாதுகாப்பு வேண்டும் எனக் கோரினால் அதனை கருத்தில் எடுத்து பாதுகாப்பு வழங்கத் தயாராக உள்ளோம் என்றார். (ம-3)

### கைதடிச் சந்திப் பகுதியில்

## போதையில் அட்டகாசம் புரிந்த இளைஞர்கள் பொலிஸாரால் கைது

கைதடிச் சந்தியில் மது போதையில் அட்டகாசம் புரிந்த இளைஞர்களை நேற்று புதன்கிழமை மாலை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மறவன்புலவு பகுதியைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் மதுபோதையில் அட்டகாசம் புரிவதாக கைதடிப் பிரதேச மக்கள் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு உடனடியாக பொலிஸ் பேருந்தில் சென்று அவர்களை ஏற்றிக் கொண்டு வரும் போது பேருந்தின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்கியுள்ளனர்.

இதில் காயமடைந்தவர்களை சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்திய பின்னர் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-114)

### கைதடியில் இருவர் கைது

## பொலிஸ் பேருந்தினை சேதப்படுத்தியதற்காக

தென்மராட்சி-கைதடிப் பகுதியில் பொலிஸ் பஸ்ஸினைத் தாக்கி சேதப்படுத்திய குற்றச்சாட்டில் இருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதடிப் பகுதியில் இடம்பெற்ற மரணச் சடங்கின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட இளைஞர் குழுக்களிற்கு இடையிலான மோதலின்போதே பொலிஸ் பஸ்ஸும் தாக்கப்பட்டுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டியில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸர்மேற்கொண்டு வருகின்றனர். (ம-30)

## யானை தாக்கி பெண் உயிரிழப்பு

புத்தளம் கல்லடி எகோடகிரல்ஓய பிரதேசத்தில் நேற்று அதிகாலை காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளான பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் கல்லடி எகோடகிரல்ஓய பிரதேசத்தைச் சேர்ந்த டபிள்யூ. ஏ.ஶ்ரீயானி குசுமலதா எனும் மூன்று பிள்ளைகளின்தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-3)

# எதிர்காலத்தில் மின்சாரத்தை தடையின்றி வழங்குவது தொடர்பில்

## ஜனாதிபதி தலைமையில் கலந்துரையாடல்

(கொழும்பு)

அன்றாட தேவைக்கான மின்சாரத்தினை தடையின்றி வழங்குவது தொடர்பிலான கலந்துரையாடல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

பருவ காலநிலையால் மழை கிடைக்கப்பெற்றாலும் மின்னுற்பத்தி செய்யப்படுகின்ற நீர்த்தேக்கங்களில் மின்னுற்பத்திக்கு தேவையான போதியளவு நீர் கிடைக்கப் பெறவில்லை என இதன்போது சுட்டிக் காட்டப்பட்டதுடன், சிக்கனமாக மின்சாரத்தினை பயன்படுத்துமாறு ஜனாதிபதி, அனைவரிடமும் வேண்டுகோள் விடுத்தார்.

அதேபோன்று அன்றாட தேவைக்கான மின்சாரத்தினை தொடர்ச்சியாக வழங்குவதற்கு மாற்று மின்சக்தி முறைமைகளை பயன்படுத்துவது தொடர்பிலும் தீர்க்கமாக கலந்துரையாடப்பட்டது.

மின்வலு, மின்சக்தி மற்றும் தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க, அமைச்சர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர் கலா நிதி ஹர்ஷ டி சில்வா, இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரத்ன ஆகியோரும் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனெவிரத்ன உள்ளிட்ட அமைச்சுக் களின் செயலாளர்களும் அரச அதிகாரிகளும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ். பிரதேசத்தில் டச்றோட் அச்சுவேலி பிரதேசத்திலும், மன்னார் பிரதேசத்தில் நானாட்டான் கிராமம், புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலும், நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை மன்னார் பிரதேசத்தில நானாட்டான் கிராமம், சூரியகட்டைக்காடு, மணற்குளம், இலந்தை மோட்டை, புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

## சத்திய தரிசனம்

### நல்லதை மட்டும் செய்யுங்கள்



❖ குறுக்கு வழியில் பணம் சம்பாதக்கலாம். இல்லாத ஒன்றை இருப்பது போல பெருமை பேசலாம். ஆனால் ஒருநாள் உண்மை வெளிப்படும்போது, அவமானம் உண்டாவதை யாராலும் தடுக்க முடியாது.

❖ தனிமனித ஒழுக்கமும், கட்டுப்பாடுமே சமுதாயத்தை உருவாக்குகிறது. சமுதாயத்தின் ஒழுக்கமும், கட்டுப்பாடும் பலமான நாட்டை உருவாக்குகிறது. அதனால், ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கத்தை கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

❖ எண்ணம், சொல், செயல் மூன்றையும் கடவுளுக்கு அர்ப்பணித்து விடுங்கள். ஒவ்வொரு செயலிலும் கடமையுணர்வுடன் ஈடுபடுங்கள். ஆனால், பலனை எதிர்பாராதீர்கள். எல்லாம் கடவுளின் விருப்பம் என்று பலனை அவரிடம் ஒப்படைத்துவிடுங்கள்.

இதனைச் சரணாகதி தத்துவம் என்று குறிப்பிடுவர்.

❖ நாம் ஆசைப்பட்டு தேடும் பணமும், பதவியும் இறந்தபின் நம்மோடு வரப்போவதில்லை. நாம் செய்த பாவபுண்ணியம் என்றென்றும் நம்மை தொடரப் போகிறது. அதனால், நல்ல செயல்களை மட்டும் செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயூரன் அபார அரைச்சதம்
# கல்வியங்காடு பாபா அணி சம்பியன்





கிளிநொச்சி இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திய வடமாகாண ரீதியான மென்பந்தாட்ட சுற்றுத் தொடரை கல்வியங்காடு பாபா விளையாட்டுக் கழகம் கைப்பற்றியது. கிளிநொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில்கல்வியங்காடு பாபா அணியை எதிர்த்து கிளிநொச்சி இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாபா விளையாட்டுக்கழகம் 6 ஓவர்கள் நிறைவில் 114 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மயூரன் அணி சார்பாக அதிரடியாக ஆடி 65 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்து இளைஞர் பலத்த போராட்டத்தை வெளிப்படுத்திய போதும் இறுதி ஓவரினை சிறப்பாக வீசிய அபிராம் பாபா அணிக்கு 6 ஓவர்கள் நிறைவில் 103 ஓட்டங்களைப் பெற்று 11 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக பாபா அணியின் மயூரன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# மீண்டும் வேலையைக் காட்டிய அஸ்வின் வறுத்தெடுக்கும் நெட்டிசன்கள்



ஐ.பி.எல்.தொடரின் லீக் ஆட்டத்தில் பஞ்சாப் அணித்தலைவர் அஸ்வின், இரண்டு முறை மன்கட் அவுட் செய்ய முயற்சித்தாரா? என்ற கேள்வி எழுந்த நிலையில், நெட்டிசன்கள் அவரது செயலை கடுமையாக விமர்சித்துள்ளனர்.

ஐ.சி.சி. விதிமுறைகளின்படி மன்கட் அவுட் செய்யும் முறை கிரிக்கெட் போட்டியில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருந்தாலும், **Spirit of the Cricket** துடுப்பாட்ட வீரரை எச்சரிக்கை செய்ய வேண்டும்.

ஆனால். **Spirit of the Cricket**-ஐ மீறி இந்த ஐ.பி.எல்.சீசனில் பஞ்சாப் அணித்தலைவர் அஸ்வின், ராஜஸ்தான் அணி வீரர் பட்லரை மன்கட் முறையில் ஆட்டமிழக்கச் செய்தது சர்ச்சையை ஏற்படுத்தியது.

அதன் பின்னர் டில்லி அணிக்கு எதிரான போட்டியில், தவானை அவர் மன்கட் அவுட் செய்ய முயன்றார். ஆனால் அது தோல்வியில் முடிந்ததால் தவானின் கிண்டலுக்கு ஆளானார். இதனால் அஸ்வின் மீது விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில், ஐதராபாத் அணிக்கு எதிராக நடந்த போட்டியில் 6 ஆவது ஓவரை அஸ்வின் வீசினார். 2 ஆவது பந்தை வீச ஓடி வந்த அவர், ஸ்டெம்ப் அருகே வந்ததும் நின்றுவிட்டார். அப்போது துடுப்பாட்ட வீரர் சாஹா கிரீஸ்க்குள் இருந்தார்.

இதனால் அமைதியாக சென்ற அஸ்வின், 4 ஆவது பந்தை வீச ஓடி வந்த போதும் கிரீஸ் அருகே வந்து நின்றுவிட்டு சாஹாவின் கிரீஸைப் பார்த்தார். ஆனால், அப்போது சாஹா கிரீஸ்க்குள் இருந்தார்.

இதனை கவனித்த நடுவர் அஸ்வினை அழைத்து. பந்து வீச வந்து பாதியிலேயே இரு முறை செய்வது குறித்து கேட்டறிந்தார்.

ஆனால், அவர் மன்கட் அவுட் செய்ய முயற்சித்தாரா? என்பது தெரியவில்லை. இந்நிலையில், சமூக வலைத்தளங்களில் பலர் அஸ்வினின் இந்தச் செயல் குறித்து விமர்சித்து வருகின்றனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# துணைத்தலைவர் பதவியில் நான் இதைத்தான் செய்கிறேன்

## ரோகித் ஓபின்



இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரராக திகழ்பவர் ரோகித் சர்மா. இவர் துணைக் தலைவராகவும் இருக்கிறார். ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவராக உள்ளார். இவர் தலைமையில் மும்பை இந்தியன்ஸ் மூன்று முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

இதனால் விராட் ஹோலியை விட ரோகித் சர்மா, எம்.எஸ். டோனி ஆகியோர் தலைவர் பதவியில் சிறந்தவர்கள் என்று பேசப்பட்டு வருகிறது. ஆனால், ரோகித் சர்மா இந்திய அணியில் தனது பணி எது என்பதை சரியாகப் புரிந்து வைத்துள்ளார்.

இதுகுறித்து ரோகித் சர்மா கூறுகையில், "துணைக் தலைவராக எனது பொறுப்பு விராட் ஹோலியின் கப்டன் பதவிக்கு மாற்றாக இருக்க வேண்டும் என்பதுதான். அவருக்கு சந்தேகம் அல்லது உதவி ஏதாவது வேண்டும் என்றால், நான் உதவி புரிவேன். இதைத்தான் நாங்கள் கடந்த சில வருடங்களாக கடைபிடித்து வருகிறோம்" என்றார். (க)

# மழையால் கைவிடப்பட்ட போட்டி வெளியேறியது பெங்களூர்


ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நேற்று முன்தினம் பெங்களூர் சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்த 49 ஆவது லீக் ஆட்டத்தில் பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் அணி, ராஜஸ்தான் ராயல்சை எதிர்கொண்டது. இதில் 'டாஸ்' ஜெயித்த ராஜஸ்தான் தலைவர் ஸ்டீவன் சுமித் முதலில் பந்து வீசுவதாக அறிவித்தார்.

போட்டி தொடங்குவதற்கு முன்பாக மழை குறுக்கிட்டது. நீண்ட நேரம் மழை பெய்ததால் 3 மணி நேரத்திற்கு மேலாக ஆட்டம் பாதிக்கப்பட்டது. இதனால் இந்த ஆட்டம் 5 ஓவர் கொண்டதாக குறைக்கப்பட்டது.

இதன்படி பெங்களூர் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக தலைவர் விராட் ஹோலியும் டிவில்லியர்சும் இறங்கினர். வருண் ஆரோன் வீசிய தொடக்க ஓவரில் முதல் இரு பந்துகளை ஹோலி சிக்சருக்கு பறக்கவிட, அதே ஓவரில் டிவில்லியர்ஸ் 2 பவுண்டரி ஓடவிட்டார். சுழற்பந்து வீச்சாளர் ஸ்ரேயாஸ் கோபால் வீசிய அடுத்த ஓவரில் சிக்சர், பவுண்டரி விரட்டிய விராட் ஹோலி (25 ஓட்டங்கள்) அதே ஓவரில் கேட்ச் ஆகிப்போனார். அடுத்தடுத்த பந்தில் டிவில்லியர்ஸ் (10 ஓட்டங்கள்), ஸ்டோனிஸ் (0) ஆகியோரும் கேட்ச் ஆக கோபால் 'ஹாட்ரிக்' சாதனைக்கு சொந்தக்காரர் ஆனார். நடப்புத் தொடரில் இது 2 ஆவது ஹாட்ரிக் ஆகும். ஏற்கனவே பஞ்சாப் வீரர் சாம் குர்ரன் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்தி இருந்தார்.

பின்னர் வந்த வீரர்களும் முடிந்த வரை வேகம் காட்ட முயற்சித்தனர். அதேவேளையில் விக்கெட்டுகளும் சரிந்தன. நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் பெங்களூர் அணி 7 விக்கெட்டுக்கு 62 ஓட்டங்கள் எடுத்தது. ராஜஸ்தான் தரப்பில் ஸ்ரேயாஸ் கோபால் 3 விக்கெட்டுகளும் ஒஷானே தாமஸ் 2 விக்கெட்டும் கைப்பற்றினர்.

அடுத்து களம் இறங்கிய ராஜஸ்தான் அணி 3.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டுக்கு 41 ஓட்டங்கள் எடுத்த போது மறுபடியும் மழை கொட்டித் தீர்த்தது. இதனால் இந்த ஆட்டத்தை அத்துடன் கைவிடுவதாக நடுவர்கள் அறிவித்தனர். இதையடுத்து இரு அணிக்கும் தலா ஒரு புள்ளி பகிர்ந்தளிக்கப்பட்டது. இதன்மூலம் பெங்களூர் அணிக்கு நூலிழையில் ஒட்டிக்கொண்டு இருந்த அடுத்த சுற்று வாய்ப்பு முற்றிலும் முடிந்து போனது. தொடர்ந்து 3 ஆவது ஆண்டாக விராட் ஹோலி தலைமையிலான பெங்களூர் அணி முதல் சுற்றுடன் வெளியேறி இருக்கிறது. (க)







ஆவரங்கால் சமுர்த்தி வங்கியின் புது வருட விளையாட்டு விழா அச்சுவேலி ஸ்டார் விளையாட்டுக் கழக மைதானத்தில் வங்கி முகாமையாளர் தலைமையில் நடைபெற்றது. சிறுவர் , பெரியோர்களுக்கான பாரம்பரிய விளையாட்டுக்கள் நடைபெற்றன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்கொலை குண்...

கடந்த மாதம் 21ஆம் திகதி இலங்கையின் 8 இடங்களில் தற்கொலை குண்டுத்தாக்குதல் மேற்கொண்ட குண்டுதாரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தில் தற்கொலை தாக்குதல் மேற்கொண்டவர் மட்டக்குளி மத்திய வீதியை சேர்ந்த இலாஹுதின் அஹமட் முவாத் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அந்த தாக்குதலுக்கு உதவிய குற்றச்சாட்டில் அவரது சகோதரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுவப்பிட்டிய தேவாலயத்தில் தாக்குதல் மேற்கொண்டவர் வாழைச்சேனை பிரதேசத்தை சேர்ந்த அச்சி மொஹமட் ஹஸ்துன் என்பவர் என தெரியவந்துள்ளது. இந்த குண்டுத் தாக்குதல் மேற்கொண்டவரின் மனைவி சாரா அண்மையில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார். அவர் சாய்ந்தமருது தாக்குதலில் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸாரால் நம்பப்படுகின்றது.

கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலுக்கு மொஹமட் அசாம் மொஹமட் முபாரக் என்பவரினால் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவரது மனைவி தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

ஷங்கிரி லா ஹோட்டலில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் இரண்டு பேர் தொடர்புபட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் மொஹமட் ஹாசிம் மொஹமட் சஹ்ரான். அவரது மனைவி மற்றும் மகள் சாய்ந்தமருது வீட்டில் இருந்து பொலிஸாரால் காப்பாற்றப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சஹ்ரானின் தந்தை மற்றும் சகோதரர்கள் சாய்ந்தமருது வீட்டில் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரால் நம்பப்படுகின்றது.

இதேவேளை, ஷங்கிரிலா ஹோட்டலுக்கு தாக்குதல் மேற்கொண்டவர் மொஹமட் இப்ராஹிம் இல்ஹாம் அஹமட் என்பவ' ராகும். அவர் தெமட்டகொட பிரதேசத்தை சேர்ந்தவராகும். அத்துடன் சினமன் கார்டன் ஹோட்டலுக்கு அவரது சகோதரரான மொஹமட் இப்ராஹிம் இன்ஷான் அஹமட் என்பவரினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களின் சகோதரன் மற்றும் தந்தை கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெமட்டகொட மஹவில பூங்கா வீட்டில் இடம்பெற்ற தாக்குதலில் பாத்திமா இல்ஹாட் என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். அவர் ஷங்கிரி லா ஹோட்டலுக்கு தாக்குதல் மேற்கொண்ட மொஹமட் இப்ராஹிம் இல்ஹாமின் மனைவி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு சியோன் தேவாலயத்திற்கு மொஹமட் நசார் மொஹமட் அசாத் என்பவரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர் வாழைச்சேனை பிரதேசத்தை சேர்ந்த ஒருவராகும்.

தெஹிவளை ரொபிக்கல் இன் ஹோட்டலில் குண்டை வெடிக்க வைத்து உயிரிழந்தவர் அப்துல் லதீப் ஜமீல் மொஹமட் என்பவராகும்.

தொடர் தற்கொலை குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடையவர்களின் பல்வேறு சொத்துக்கள் தொடர்பில் தகவல் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களது சொத்துக்களை அரசுடமையாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## பிரபாகரன் இன்று...

கையில்,

நான் கடந்த முப்பது வருடங்களில் யுத்தத்தை நன்கு அறிந்த பிக்கு. நான் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் நான் இங்கு இருந்தேன், அப்போது நான் வாகரை, கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளுக்குச் சென்றுள்ளேன்.

அந்த பகுதிகளுக்குச் சென்ற நான் விகாரைகளைப் புனரமைப்பதற்காக விடுதலைப் புலிகளிடம் இருந்து பல உதவிகளைப் பெற்றுள்ளேன். அதன்போது என்னை எவரும் விரல் நீட்டி பேசியதில்லை. எனக்கு அச்சுறுத்தல் விடுத்ததில்லை.

தற்போது உள்ள அரசியல் தலைமைகள், தமிழ் தலைமைகள் உள்ளிட்ட பலர் என்மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

யுத்தக்காலத்தில் கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த இரண்டாயிரம் சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு இதுவரை காணிகள் கிடைக்கவில்லை. அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவற்றை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக பல முறை ஆட்சியாளர்களுடன் விவாதத்தில் ஈடுபட்டேன். அப்போது தமிழ் மக்களின் தலைமைகள் என சொல்லிக்கொள்ளும் தமிழ் அரசியல்வாதிகள் இது இனத்துவேசம் என என்மீது குற்றம் சுமத்தினர்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதேசமான புனானை பிரதேசத்தில் மூவினங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்பதற்கான திறந்தவெளி பல்கலைக் கழகம் கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்வினால் அமைக்கப்படுகின்றது.

தமிழ் மக்களுக்கு சொந்தமான 400 ஏக்கர் நிலப்பரப்பை தமிழ் மக்களுக்கு வழங்காமல் திறந்தவெளி பல்கலைக்கழகம் அமைப்பதற்கு எவ்வாறு அரசாங்கம் அனுமதி கொடுத்தது.

புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால் இந்த புனானையில் கட்டடம் கட்டப்பட்டிருக்குமா? கிழக்கு பறிபோயிருக்குமா?

எதிர்காலத்தில் நாட்டில் சுபீட்சம் நிலவுவதற்கு எதிர்காலத்தில் பிரபாகரனே மீண்டும் வரவேண்டுமா? என எண்ணத் தோன்றுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## எத்தகைய நெரு...

பொதுஜன பெரமுனவினர் ஏற்பாடு செய்த மே தினக் கூட்டம் நேற்று கோட்டை நகர சபை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

ஐக்கிய தேசியக் கட்சிக்கு உழைப்பாளிகள் தொடர்பில் எவ்வித அக்கறையும் கிடையாது. சர்வாதிகாரமான போக்கில் ஆட்சியினை முன்னெடுத்து செல்வதும், அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் தொழிலாளர்களை வன்முறைகளின் ஊடாக அடக்குவதில் மாத்திரமே கவனம் செலுத்தியது.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜயவர்தன மே தினத்தை இரத்து செய்தார் இதற்கு எதிராக லங்கா சமசமாஜ கட்சி போராட்டத்தை முன்னெடுத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் மே தின கூட்டத்தை நடத்துகையில் அரசாங்கம் பலவந்தமாக அடக்குமுறையில் ஈடுபட்டது. 1996ஆம் ஆண்டும் மே தினம் இரத்து செய்யப்பட்டமைக்கு அப்போதைய அரசாங்கம் பல்வேறு காரணிகளை குறிப்பிட்டமையினை ஏற்றுக்கொள்ள முடியாது.

தொழிலாளர்கள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பத்தில் இருந்து அக்கறை கொள்ளவில்லை. இவர்கள் மேற்கத்தைய தொழிற் கலாசாரத்திற்கு அடிபணிந்து செயற்படுவதே பல விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் தற்போது கொள்கையற்ற அரசாங்கம் ஆதிக்கம் செலுத்துவதால் தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. அரச தலைவர்களுக்கிடையில் காணப்படுகின்ற போட்டித்தன்மை இன்று சர்வதேச தீவிரவாதம் நாட்டுக்குள் ஊடுருவுவதற்கு வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் தற்போது தேசிய பாதுகாப்பும், தேசிய நல்லிணக்கமும் வீழ்ச்சியடைந்துள்ளமையினை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்திய புலனாய்வு பிரிவினர் முன்கூட்டியே தாக்குதல்கள் தொடர்பில் எச்சரித்தும் அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் ஏன் முன்னெடுக்கவில்லை. இதன் பின்னணியில் பல சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளது.

தற்போது தமது இயலாமையினை மறைக்க பிறர் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்த வழிகள் அரசாங்கத்தால் தேடப்படுகின்றது. நாட்டில் எவ்வகையான நெருக்கடிகள் காணப்பட்டாலும் அனைத்தையும் வெற்றி கொண்டு அரசாங்கத்தை நிச்சயம் கைப்பற்றுவோம்.

தீவிரவாதத்தை வெற்றி கொள்ள எமது புலனாய்வு பிரிவினருக்கும், இராணுவத்தினருக்கும் வல்லமை காணப்படுகின்றது. சர்வதேச இராணுவத்தினரது உதவியை நாடுவது நிலைமையினை மேலும் பாரதூரப்படுத்தும் என்றார். (ம-3)

## பயங்கரவாதத்தி...

னில் ஏற்பட்ட வேதனையை பயங்கரவாதத்தை ஒழிக்கும் சக்தியாக பயன்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாக தெரியவில்லை என்று ஒருவருக்கொருவர் குறைகூறிக் கொள்வதனை விடுத்து நாடு என்ற வகையில் ஒரே இனமாக ஒன்று திரண்டு அன்று இடம்பெற்ற துன்பியல் சம்பவத்தின் வடுக்களை நினைவிற் கொண்டு பயங்கரவாதத்தை இல்லாதொழித்து நாட்டின் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு உறுதியுடனும் தன்னம்பிக்கையுடனும் அனைவரும் ஒரே கொடியின் கீழ் ஒன்று திரள வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் இலங்கை மன்றத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மே தின நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்பான தாய்நாடு - உற்சாகமான வேலைத்தளம் என்ற தொனிப்பொருளின் கீழ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொழிற்சங்க ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் உள்ளிட்ட பெருமளவிலான கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

புதிய சமசமாஜ கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன, லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோர் உள்ளிட்ட இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளும் ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் பிரதான செயலாளர் லெஸ்லி தேவேந்திர உள்ளிட்ட தொழிற் சங்க தலைவர்களும் பிரதிநிதிகளும் இந் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் உயிரை பணயம் வைத்தேனும் பயங்கரவாதத்தை வேரோடு பிடுங்கி எறிவதற்கு உறுதிபூண்டு இருப்பதாக ஜனாதிபதி அழுத்தமாக தெரிவித்தார்.

நாட்டின் அனைத்து குடிமக்களினதும் பாதுகாப்பை உறுதி செய்திருப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, தேசிய பாதுகாப்பு தொடர்பில் வெளிநாட்டு நிபுணத்துவத்துடன் கூடிய விசேட வேலைத்திட்டங்களை எமது பாதுகாப்பு படையினர் நாடளாவிய ரீதியில் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, இந்த துன்பியல் சம்பவத்தை தடுப்பதற்கான பொறுப்பை தவறவிட்டவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நியமிக்கப்பட்ட விசேட விசாரணை குழுவின் இடைக்கால அறிக்கை தனக்கு கிடைத்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் இன்றைய தினம் சட்டமா அதிபருடன் கலந்துரையாடியதன் பின்னர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டில் உழைக்கும் மக்கள், தொழிற் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் தேசிய பாதுகாப்பை உறுதி செய்து, அமைதியான நாட்டை கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் பிரிவினையின்றி ஒன்று திரள்வார்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை தெரிவித்தார். (ம-3)

## தௌஹீத் ஜமாத்...

இடமளித்துள்ளதாகவும் எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவரின் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இதனை தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது.

தொடர் குண்டுத் தாக்குதலுக்கான முழுப் பொறுப்பும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே உள்ளது. நல்லிணக்கம், மனித உரிமை போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்த அரசாங்கம் நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தாமையினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்த்தரப்புக்கும் இந்த தௌஹீத் ஜமாத் அமைப்புகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் நெருங்கிய தொடர்பினை பேணி வருகின்றது.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் கடந்த 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் 2015 ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கும் அதன் வேட்பாளர் ஜனாதிபதி மைத்திரபால சிறிசேனவுக்கும் ஆதரவை பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டதாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

எனவே தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்பை பேணிவந்துள்ள நிலையில் கடந்த நாட்களில் அந்த அமைப்பு ஜனாதிபதிக்கு எதிராக கருத்துக்களையும் வெளியிட்டிருந்தது. ஆனால் எதிர்த்தரப்புடன் தௌஹீத் ஜமாத்தை சேர்ந்த எந்த அமைப்புக்களும் தொடர்பில் இல்லை. (ம-3)

## ஒரு வெளிநாட்ட...

தலில் கூட அவர்கள் மிக தெளிவாக இருந்தார்கள் வெளிநாட்டவர்கள் கொல்லப்படகூடாது என்பதில். ஆனால் இப்போது நடந்துள்ள தாக்குதலில் 37 வெளிநாட்டவர்கள் இறந்துள்ளனர். புலிகள் வெளிநாட்டவர்களை வெறுக்கவில்லை. இவர்கள் வெளிநாட்டவர்களை வெறுக்கிறார்கள் என வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கூறினார்.

சமகால நிலமைகள் குறித்து நேற்று ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இதன்போது, மேலும் அவர் கூறுகையில்,

குறிப்பாக கட்டுநாயக்க விமானத்தளம் மீதான தாக்குதலிலும் கூட புலிகள் மிக நிதானமாக நடந்து கொண்டார்கள். வெளிநாட்டவர்கள் கொலைசெய்யப்படகூடாது என்பதில் தெளிவாக இருந்தார்கள் என்றார். (ம-3)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 01-05-2019
சீட்டிழுப்பு இலக்கம் 936
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 4 8 8 2 4 6
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2019.05.01
சீட்டிழுப்பு இலக்கம் 2106
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 01 30 43 48

### தன நிதானய

திகதி 2019/05/01
சீட்டிழுப்பு இலக்கம் 0143
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 14 15 51 57

### மெகா பவர்

திகதி 01/05/2019
சீட்டிழுப்பு இலக்கம் 0374
வெற்றி எழுத்து V
சுப்பர் இலக்க 17
வெற்றி இலக்கங்கள் 05 35 76 79
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (8614)

Job! Job! Job!
INNECIRCLE (PVT) LIMITED
0767707759, 0779994807

நீங்கள் O/L, A/L பயின்றவரா?
இவ்விலக்கத்துக்கு அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க! நாடு முழுவதும் 40 பேருக்கு முன்னுரிமை.

- நிர்வாக அதிகாரி
- செயற்றிட்ட அதிகாரி
- அலுவலக உதவியாளர்
- மேற்பார்வையாளர்

அனுபவம் தேவையில்லை. தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்.
பயிற்சியின் போது அடிப்படைச் சம்பளம் 24,550/= (EPF, ETF) பின்னர் 45,000/= + (EPF, ETF) அடங்கலாக தொழில் நிரந்தரமாக்கப்படும். (8646)

## படையினர் மீது...

பொலிஸாருக்கு சொந்தமான வாகனத்தில் துணை இராணுவ படையினர் பாதுகாப்புப் பணிக்கு சென்றுள்ளனர்.

அந்தவாகனம் மஹாராஷ்ரா மாநிலத்திற்கும் சதீஸ்கர் மாநிலத்திற்கும் இடையேயான எல்லைபகுதியை எட்டியதும், நக்சலைட்டுகள் புதைத்து வைத்திருந்த வெடிகுண்டு வெடித்தது. இதில் வாகனம் சிதறி 16 வீரர்கள் சம்பவ இடத்தில் பலியாகினர்.

மேலும் படுகாயங்களுடன் வீரர்கள் பலர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதல் மஹாராஷ்ராவில் நிகழ்வு நடந்ததிலிருந்து 24மணி நேரத்தில் நக்சலைட்டுகளால் நடத்தப்படும் இரண்டாவது தாக்குதல் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று முன்தினம் குர்கேடா பகுதியில் சாலை அமைக்கும் பணிகள் நடந்த இடத்தில் 27 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களுக்கு நக்சலைட்டுகள் தீவைத்துள்ளனர். (ம-3)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240 (C-6232)
V2 TRAVELS
- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

## தவறவிடப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் (30.04.2019) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை தனியார் பேருந்தில் தேசிய அடையாள அட்டை, சிறுதொகை பணம், நகை உட்பட சிறு பை ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு:
0778575104, 0778570362

## இடைக்கால அறிக்கை ஜனாதி...

சட்டமா அதிபருடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

குறித்த பேச்சுவார்த்தை இன்று வியாழக்கிழமை இடம்பெறும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-3)

ருமேனியா
ஹொட்டேல்துறை வேலைவாய்ப்பு
Pastry Cook, Baker/Bread maker
Bartender(Male/Female), Kebab Cook(Helpers)
Bartender Mixology, Waiter & Helpers (Ladies)
Western Cook, Asian Cook, Dish Washer
சம்பளம்: ரூ. 61,215 - ரூ.139,920 வரை
சான்றிதழ்கள், அனுபவ கடிதங்களுடன் நேரில் வரவும்
பயிற்சி, முன்னனுபவம் இல்லாதவர்களுக்கு
ஹொட்டேல்துறை பயிற்சியுடன் வேலைவாய்ப்பு!
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
0777 324 004
077 36 16 798
021 221 9 221
221-1/1. மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Loverக்கு அருகே)
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

## இனந்...

தொழுகையின் போது இந்த சம்பவம் நடந்துள்ளது.

பள்ளிவாசல் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தியதுடன் சில தளபாடங்களையும் உடைத்துவிட்டு, பக்கத்தில் இருந்த சிறு ஹோட்டல் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்திவிட்டு சென்றுள்ளனர் என அறிய முடிகின்றது. (ம-3)

பங்குச்சந்தை முதலீடுகளுக்கான முழுமையான அறிவு
Share Market Workshop அடிப்படை முதலீட்டு உத்திகள்
CSE கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
மே 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி - மாலை 4.00 மணிவரை
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை, யாழ் - கிளையில்.
தொடர்புகளுக்கு: 021 222 1455 / 077 782 2014
பதிவுக்கட்டணம் ரூபா: 1000/=

# மரண அறிவித்தல்



## பாலசுப்பிரமணியம் கவிராஜ் (கவி)

(யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவன், Bimputh Finance வெளிக்கள உத்தியோகத்தர்)

மானிப்பாய் வீதி ஐந்து சந்தியைப் பிறப்பிடமாகவும், சோலைபுரம் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் கவிராஜ் (கவி) அவர்கள் கடந்த (29.04.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் லக்ஷ்மி தம்பதியினரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சுப்பையா - கற்பகம் தம்பதியினரின் அன்புப் பேரனும், பாலசுப்பிரமணியம் - இராணியம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும், தர்ஷிகா, தனுசன், நிஷாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரிஷாந்தன் அவர்களின் அன்பு மைத்துனரும், மகிசயனின் அன்புச் சிறிய தந்தையும், தியாகராஜா, இராமன், இலட்சுமணன், பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு பெறாமகனும், பிரகாஸ், லோசன், தினேஸ்குமார், திருச்செல்வம், வெண்ணிலா, தர்மசீலன், கார்த்திகாயினி, ஜெயசீலன், யாழினி, சத்தியமூர்த்தி, காலஞ்சென்றவர்களான சிவச்சந்திரன், சதீஸ்குமார் மற்றும் தர்ஷினி, கவிதா, சிவப்பிரியா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2019) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

123/10, சோலைபுரம்,
கொட்டடி, யாழ்ப்பாணம். (8639)

தகவல்: குடும்பத்தினர்
077 386 8675

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org